
# The Bible Standard

## (தமிழ் வெளியீடு)



“உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.

அவைகள் என்னை நடத்தும்.” சங். 43:3

**“LIFT UP A STANDARD FOR THE PEOPLE”**
**Isaiah 62 : 10**

**Translated from BS 876**

**பொருளடக்கம்**


இஸ்ரவேலர் திரும்பச் சேர்க்கப்படுதல் ......... 2

ஆயிர வருஷமும் பூமியில் வரப்போகிற ராஜ்யமும் ................. 11



BS Tamil Version - 21

2013



# இஸ்ரவேலர் திரும்பச் சேர்க்கப்படுதல்

The Regathering of Israel

நம்முடைய இக்காலத்தில் மகா ஆச்சரியமானதும் குறிப்பிடத்தக்கதுமான தீர்க்கத்தரிசன நிறைவேறுதல் களில் ஒன்று இஸ்ரவேலரை அவர்களின் தாய்நாட்டில் திரும்பக் கூட்டிச் சேர்ப்பதாகும். வேத வசனங்களின்படி அது தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டு அதோடுகூட மனுக்குலம் முழுவதின் மீதும் வரும் ஆசீர்வாதங்களும் சமீபித்திருக்கிறது என்பதைக் குறித்துக் காட்டும் அத்தாட்சிகளில் ஒன்றாகும். (ஏசா. 2 : 2-4; மீகா. 4 : 1-4; லூக். 21 : 29-31; ரோம. 11 : 12, 15) யூதரும் புற ஜாதியாரும் இந்த ராஜ்ய ஸ்தாபிதத்தை எதிர்பார்த்து நம்பிக்கையுடனிருக்கிறார்கள்.(தானி. 2 : 35, 44; 7 : 13, 14, 18, 22, 27; மத். 6 : 10) ஆகையால் இங்கு சொல்லப்பட்டபடி இஸ்ரவேலர் தங்கள் தாய்நாடு திரும்புவதின் சம்பந்தமான குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளை விவரித்துக் கூறுவது யாவருக்கும் மிகுந்த விருப்பமானதாகும்.



எல்லா கண்களும் இஸ்ரேல் மீது இருக்கின்றன

## சிதேக்கியா நீக்கப்பட்டபின் இஸ்ரவேலர்


பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் கி.மு. 607-ல் சிதேக்கியாவை சிங்காசனத்திலிருந்து நீக்கி, அவனையும் ஜனங்களையும் பாபிலோனுக்கு சிறை களாகக் கொண்டு போய் எருசலேமையும் தேவால யத்தையும் அழித்து நாட்டைப் பாழாக்கி தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை நிறைவேற்றினான். (எசே. 21 : 25-27; எரே. 25 : 9-11; 2 நாளா. 36 : 17-21). இஸ்ரவேலரின் வரலாற்றுச் சங்கிலியின் இந்த காலகட்டத்தை, அதாவது கி.பி. 607-ஐ நாம் நம் கவனத்திற்கு எடுப்போம். தீர்க்கதரிசனத்தில் தேசம் பாழாய்க் கிடக்கும் கால அளவு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது எழுபது வருஷங் களென்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவும் நிறைவேறி விட்டது. பெர்சியரின் ராஜாவாகிய கோரேஸ் பாபிலோனை ஜெயித்தான். எழுபது வருஷங்களின் முடிவைக் குறிக்கும் அவனுடைய ஆட்சியின் முதல் வருஷத்தில் இஸ்ரவேலர் தங்கள் நாட்டுக்குச் சென்று எருசலேமைத் திரும்பக் கட்ட அனுமதி கொடுத்தது மாத்திரமல்ல அப்படிச் செய்ய உதவியும் செய்தான் (2 நாளா. 36 : 22, 23; எஸ்றா 1) ஆதலின் எஸ்றாவின் புஸ்தகத்திலும் நெகேமியாவின் புஸ்தகத்திலும் சொல்லியிருக்கிறபடி இஸ்ரவேலரில் அநேகர் திரும்பிச் சென்றனர். அப்பொழுது எருசலேம் திரும்பக் கட்டப்பட்டு சிறை சென்றவர்கள் திரும்பி வந்தாலும் இஸ்ரவேலருக்கு பூரண சுதந்தரம் கொடுக்கப் படவில்லை. அவர்கள் கோரேஸினால் தங்கள் சுய நாட்டுக்கு அனுப்பப்பட்டு தனிச் சுதந்திரம் அடைந் திருந்தாலும் அவர்கள் ஒரு ஜாதியாக தொடர்ந்து மேதிய பெர்சியருக்கும் கிரேக்கருக்கும், ரோமருக்கும் அடங்கி கீழ்பட்டவர்களாயிருந்தார்கள்.

## 70 வாரங்களைப் பற்றிய தானியேலின் தீர்க்கதரிசனம்

தானியேல் தீர்க்கத்தரிசி 70 வாரங்களைப் பற்றித் தீர்க்கத் தரிசனம் சொல்லியிருக்கிறார் (தானி. 9 : 24-27) அதில் 69 வாரங்கள் எருசலேமை திரும்ப எடுப்பித்துக் கட்டுவதற்கான கட்டளை வெளிப்பட்டது முதல் பிரபுவாகிய மேசியா வந்தது வரையுள்ள காலமாகும் (வச. 25) ஒரு நாளை ஒரு வருஷமாகக் கொண்டால் (எசே. 4 : 6) எழுபது வாரங்கள் அடையாளமான 490 வருஷங் களாகும். அடையாளமான 69 வாரங்கள் (483 வருஷங்கள்) நெகேமியா கி.மு. 455-ல் உத்தரவு பெற்றது முதல் கி.பி. 29-ல் இஸ்ரவேலரின் பிரபுவாகிய மேசியா வந்தது வரையுள்ள காலமாகும். 70 - தாவது வாரத்தின் மத்தியில் இஸ்ரவேலரின் மேசியா சங்கரிக்கப்பட வேண்டும். ஆனால் தமக்காக அல்ல (வச. 26) கி.பி. 29 ஆரம்பத்திலிருந்து 3 $^1/_2$ வருஷங்களுக்குப் பின் கி.பி. 33 இளவேனீர் (வசந்த) காலத்தில் இஸ்ரவேலரின் மேசியா சிலுவையில் அறையப்பட்டார். இஸ்ரவேலர் தங்கள் மேசியாவைப் புறக்கணித்ததால் ஒரு ஜாதியாக அவர்களுக்கு இருந்த தேவ தயவு கி.பி. 33-ல் முடிவடைந்தது. என்றாலும் தனிப்பட்ட யூதருக்கு 70 தாவது வார முடிவு வரை கி.பி. 36 வரை தயவு கிடைத்து வந்தது. அது முதல் தேவ தயவு புறஜாதியாருக்குப் போக ஆரம்பித்தது. தேவ தயவு பெற்ற முதல் புறஜாதியான் கொர்நேலியு (அப். 10) நகரத்தின் அழிவும் பரிசுத்தஸ் தலத்தின் அழிவும் முன்னறிவிக்கப்பட்டிருக் கிறது. (வச. 26, 27) இது கி.பி. 70-73-ல் ரோம அரசன் தீத்து சேனையுடன் வந்து எருசலேமை அழித்ததில் நிறை வேறிற்று. அந்நேரத்தில் யூதரின் மகா உபத்திரவமும் அதனால் அவர்கள் எல்லா ஜாதிகளுக்குள்ளும் சிதறிப் போனதும் லூக். 21 : 20-24-ல் முன்னறிவிக்கப் பட்டிருக்கிறது.

சுவிசேஷ யுகம் முழுவதும் பல நாடுகளில் அவர்கள் சிதறடிக்கப்பட்டது மேலும் பல தீர்க்கதரிசனங் களிலும் முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக ஏசா. 43 : 5. 6; எரே. 16 : 13-16; 23 : 7. 8; 29 : 14; 30 : 11; 32 : 37. அவர்கள் தேசமும் நகரங்களும் அழிக்கப்படுவதைப் பற்றி வேறு வேத வசனங்களும் முன்னறிவித்திருக்கின்றன. உதாரணமாக உபா. 29 : 22-24, 27; ஏசா.17 : 4-6; எரே. 4 : 20. 26-28; 12 : 4, 7, 10-13; 19 : 8; ஆமோ. 3 : 14; 5 : 3, 5; 7 : 8, 9; மீகா 1 : 6; மத். 11 : 20-24.

## தேவதயவு திரும்பக் கிடைப்பதில் ஏற்பட்ட திருப்பம்



டிஸ்ரேலி என்ற யூதர், பாலஸ்தீனாவில் யூதர்கள் குடியேற உரிமையளிக்கப்பட வேண்டும் என்பதை சர்வதேச சட்டமாக்கினார்.

1878 ஜுன் மாதத்தில், அப்போது இங்கிலாந்தின் பிரதம மந்திரியாயிருந்த யூதனான டிஸ்ரேலி என்பவரின் தலைமையில் கூடிய பெர்லின் காங்கிரஸ் கூட்டத்தில் ஐரோப்பிய நாடுகளின் ஒத்துழைப்பால் இஸ்ரயேலர் பலஸ்தீனாவில் குடியேறுவதற்கிருந்த தடைகள் நீக்கப்பட்டு அவர்கள் அங்கு குடியேற உரிமையளிக்கப்படவேண்டும் என்பது சர்வதேச சட்டமாக்கப்பட்டது, அக்கூட்டத்தில்தான் இங்கிலாந்து துருக்கியின் ஆசிய மாகாணங்களின் பாதுகாப்பு நாடாக ஏற்படுத்தப்பட்டது. அம்மாகாணங்களில் பலஸ்தீனாவும் ஒன்றாகும். துருக்கி அரசாங்கம் அயல்நாட்டினர் சம்பந்தமான சட்டங்களை சீர்திருத்தியது. அதனால் அப்போது பலஸ்தீனாவில் குடியிருந்த யூதர்களின் நிலைமை சீர்திருத்தியதோடு மற்ற யூதரும் சொந்தமாக நிலம் வைத்துக்கொள்ளும் சிலாக்கியத்துடன் அங்கு குடியேற ஒருவாறு வழிதிறக்கப்பட்டது. அதற்கு முன் அங்குள்ள யூதர் முகமதிய ஆட்சியாளரால் அடிக்கப்பட்டு உதைக்கப்பட்டு ஏசப்பட்ட ஒரு நாயாக இருந்தனர். ஜீவனத்துக்கு வேண்டிய சாதாரண சிலாக்கியங்களும் அவனுக்கு மறுக்கப்பட்டது. அவனு டைய பரிசுத்த நாட்டில் கடந்த காலத்தைப் பற்றிய ஞாபகங்களோடும் அவனது பிற்காலத்தைப் பற்றிய வாக்குத்தத்தங்களோடும் இவ்வாறு துன்பப்பட்டனர். ஆயினும் 1878-ம் வருஷம் மாம்ச இஸ்ரவேலருக்கு தயவு திரும்பக்கிடைக்கும் திருப்பமாக மாத்திரம் இருந்ததென் பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். அவர்கள் தயவுக்கு உயர்வதும் தங்கள் நாட்டுக்குத் திரும்புவதும் அவர்களின் விழுதல் படிப்படியாக நடைபெற்றது போல படிப்படியாக நடைபெறுவதாகும்.

## எரேமியா 16 : 14–16 பரிசீலனை

எரே. 16 : 14-16 வசனங்கள் இஸ்ரவேலர் பரிசுத்த நாட்டுக்குத் திரும்பி வருவதைப் பற்றித் தெளிவாக விவரித்துக் கூறும் வேத வசனமாயிருப்பதால் இந்த சந்தர்ப்பத்தில் அதைப் பற்றி ஆராய்ந்து பார்ப்போம். அவ்வசனங்களை எடுத்துக் காட்டுவோம். ''**இதோ நாட்கள் வரும், அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு இனிமேல் சத்தியம் பண்ணாமல், இஸ்ரவேல் புத்திரரை வடதேசத்திலும், தாம் அவர்களைத் துரத்திவிட்ட எல்லா தேசங்களிலுமிருந்து வரப்பண்ணின கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சத்தியம் பண்ணுவார்கள்: நான் அவர்கள் பிதாக்களுக்குக் கொடுத்த அவர்களுடைய தேசத்துக்கு அவர்களைத் திரும்பி வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். இதோ நான் மீன்பிடிக்கிற அநேகரை அழைத்தனுப்புவேன் இவர்கள் அவர்களைப் பிடிப்பார்கள். அதற்குப் பின்பு வேட்டைக்காரராகிய அநேகரை அழைத் தனுப்புவேன் இவர்கள் அவர்களை எல்லா மலைகளிலும், எல்லா குன்றுகளிலும், கன்மலைகளின் வெடிப்புகளிலும் வேட்டையாடுவார்கள்.**'' இதில், ''**வடதேசம்**'' என்பது ரஷ்யாவாகும். அங்கு சமீபகாலம் வரை கிட்டத்தட்ட இஸ்ரயேலரில் பாதிப்பேர் வசித்து வந்தனர். ''**எல்லா தேசங்கள்**'' என்பது அவர்கள் சிதறியிருந்த மற்ற நாடுகளைக் காட்டுகிறது. விசேஷமாக போலந்து, ஜெர்மனி, ருமேனியா, ஹங்கேரி முதலிய ஐரோப்பிய நாடுகளாகும். சுவிசேஷயுகத்தில் இஸ்ரவேலர் அங்கு சிதறிப் போயினர். இந்த நாடுகளிலிருந்து அவர்களை தங்கள் சுய தேசத்துக்குத் திரும்பக் கொண்டு வருவதாக தேவன் வாக்களித்திருக்கிறார்.

## "மீன் பிடிக்கிறவர்கள்"

1878 முதல் எரே. 16 : 16-ல் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின் படி அடையாளமான மீனாகிய இஸ்ரவேலரை பலஸ்தீனாவுக்கு இழுப்பதற்காக சீயோ னிசம் என்ற கவர்ச்சிகரமான இரையோடு தேவன் '' மீன் பிடிக்கிறவர்களை'' அனுப்பிக் கொண்டிருக்கிறார். மீன் பிடிக்கிறவர்கள் என்னப்பட்ட இவர்களில் ஒரு பகுதி இஸ்ரவேலர் திரும்பி வருவதற்கு அரசாங்க சம்பந்தமாக உதவி செய்த அரசியல் அதிகாரிகளாகும். ஒரு பகுதி துன்பப்படுத்தப்பட்ட தங்கள் சகோதரரை பலஸ்தீனாவுக்குப் போகும்படி தூண்டிய கிளர்ச்சிகாரரான இஸ்ரவேலராகும். ஒரு பகுதி வேதாகம சீயோனிசத்தை அறிவித்துவரும் ஆவிக்குரிய இஸ்ரவேலராகும் (கிறிஸ்தவர்கள்). 1882-ல் டாக்டர் தியோடர் ஹெர்ஸில் என்பவரின் முன்னோடியான லியோபின்ஸ்கர் என்பவர் பெர்லின் காங்கிரஸ் கூட்டத் தால் ஏற்பட்ட எதிர்காலப் பலனால் தைரியமூட்டப்பட்டு ஏசா. 40 : 1, 2-ல் சொல்லப்பட்ட உண்மையான ஆறுதல் என்ன என்பது பற்றி பிரசங்கிக்க ஆரம்பித்தார். லிலின்பிளம், லெவெண்டா, ரல்வ் முதலிய பல பிரபல இஸ்ரவேலர் இந்த ஆறுதலின் செய்தியை உலகமெங்கும் அறிவிப்பதற்கு அவருடன் சேர்ந்து கொண்டனர். 1896-ல் டாக்டர் ஹெர்ஸில் என்பவர் யூத அரசாங்கம் (Jewish State) என்ற தமது புத்தகத்தை வெளியிட்டார். அது

சீயோனிசம் என்ற பதத்தின் குறுகிய கருத்தில் சீயோனிசம் என்ற கிளர்ச்சியை எழுப்பிவிட்டது. எல்லா யூதரும் 1878 இளவேனிர் (வசந்த) காலமுதல் இந்த ஆறுதலைப் பெற்று வருகிறார்கள்; அது நாளுக்கு நாள் அதிகப்பட்டு வருகிறது.

## "வேட்டைக்காரர்"

எல்லா மலைகளிலிருந்தும் (ராஜ்யங்கள்) எல்லா குன்றுகளிலிருந்தும் (குறைந்த உயரமுள்ளது, குறைந்த எதேச்சதிகார அரசாங்கங்கள், பொது ஜன அல்லது குறைந்த ஏகாதிபத்திய நாடுகள்) கன்மலை வெடிப்புகளிலிருந்தும் (மனித சமுதாயத்தின் பலம் பொருந்திய ரகசிய மறைவிடங்கள்; அவர்கள் சிதறடிக்கப்பட்ட காலத்தில் அவ்விடங்களில் பாதுகாவல் அடைந்திருக்கிறார்கள்). யூதர்களை ''வேட்டைக்காரர்'' வேட்டையாடுவார்களென்று எரே. 16 : 16 கூறுகிறது. அழிக்கும் நோக்கத்துடன் வேட்டைக்காரன் ஒன்றைப் பின் தொடருகிறான். இங்கு வேட்டைக்காரர் என்பது இஸ்ரவேலரைத் துன்புறுத்தி கொள்ளையிடுகிறவர்களைக் குறிப்பிடுகிறது. 1878-ல் ருமேனியாவிலும், கலீஷியாவிலும் விசேஷமாக ரஷ்யாவிலும் பயங்கர துன்புறுத்தல் நடைபெற்றது. அதனால் 1881-ல் (May Laws) என்ற "மே சட்டம்" ஏற்படுத்தப்பட்டது. அதனால் ரஷ்யாவிலும் போலந்திலும் ருமேனியாவிலும் கலீஷியாவிலும் யூதர்கள் மிருகத்தனமாகத் தங்கள் வீடுகளிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டனர். அதைத் தொடர்ந்து பல வருஷங்களாக ஆயிரக்கணக்கான யூதர்கள் துன்புறுத்தப்பட்டு ஈவிரக்கமின்றி அநேகர் கொல்லப்பட்டனர். அநேகர் தங்கள் உயிரைக் காப்பாற்ற ஓடிப் போக வேண்டியதாயிற்று. 1903-ல் கிஸ்ஸநேவ் படுகொலையில் (Kishenev massacre) 500-க்கு அதிகமான யூதர் கொடூரமான முறையில் கொல்லப்பட்டது, யூதர்கள் மற்ற நாடுகளில் புகலிடம் தேடிக் கொள்ளும்படி வேட்டைக்காரர் செய்த கொடிய நடவடிக்கைகளில் ஒன்றாகும். முதல் உலக யுத்தத்தில் (1914-1918) சத்துருக்களை எதிர்த்துச் சென்ற ரஷ்ய படைகளுக்குப் பாதுகாவல் போர்வையாக இருக்கும்படி ஆயிரக்கணக்கான யூத ஆண்களும் பெண்களும், யூத பிள்ளைகளும் யூதர்கள் படைகளுக்கு முன்னால் செல்லும்படி துப்பாக்கி முனையில் நிர்ப்பந்திக்கப்பட்டனர். மற்றும் சில நாடுகளிலும் இப்படியே படை வீரர்கள் இரக்கமற்றவர்களாய் இருந்திருக்கிறார்கள். போலந்தில் ஆயிரக்கணக்கான யூதர்கள் எரிக்கப்பட்டனர். பெரியவர்களும் சிறியவர்களுமான யூதரை வைத்திய பரிசோதனைக்காக அறுத்ததும், சந்தான விருத்தியைத் தடுத்ததும், சொல்ல முடியாத பல கொடிய செயல்களைச் செய்ததும் விசேஷமாக இரண்டாவது உலக யுத்தத்தில் (1939-1945) ஹிட்லரும் அவனைச் சேர்ந்தவர்களும் பல்லாயிரக்கணக்கான யூதரை படுகொலை செய்ததும் பலர் நாட்டைவிட்டு ஓடவும், சிலர் பலஸ்தீனாவுக்குத் திரும்பவும் செய்தது. இவ்வாறு மனிதரின் கோபம் தமது மகிமையை விளங்கப் பண்ணும்படி தேவன் செய்கிறார். (சங். 76 : 10).

## திரும்பச் சேர்க்கப்படும் இஸ்ரவேலர் பன்னிரண்டு கோத்திரங்களிலும் உள்ளவர்கள்

இஸ்ரவேல் புத்திரரைத் திரும்ப ஒன்று சேர்ப்பதாக தேவன் அளித்த வாக்குத்தத்தத்தில் இரண்டு கோத்திரங்களிலுமிருந்து (வழக்கமாக யூதா கோத்திரமென்றழைக்கப்பட்டது) வேறுபட்டதாக பத்துக் கோத்திரங்களையும் (சில வேளைகளில் இஸ்ரவேல் எப்ராயீம் என்றழைக்கப்பட்டவர்கள்) மாத்திரம் குறிப்பிடாமல் பன்னிரண்டு கோத்திரங்களையும் குறிப்பிட்டுச் சொன்னார். ஏனெனில் கி.பி. 33-ல் புறக்கணிக்கப்பட்ட வீட்டாரான ''**காணாமற் போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டார்**'' என்பதில் பன்னிரண்டு கோத்திரங்களும் குறித்துக் காட்டப்படுகின்றன. (மத். 10 : 6) பன்னிரண்டு கோத்திரங்களும் சேர்ந்ததென்பது ஏசா. 11 : 11, 12-ல் தெளிவாகக் காட்டப்படுகிறது. அங்கு பத்துக் கோத்திரங்களும் "இஸ்ரவேல்" என்றும் இரண்டு கோத்திரங்கள் "யூதா" என்றும் தெளிவாகக் குறித்துக் காட்டப்படுகிறது. "**அக்காலத்திலே ஆண்டவர்... தம்முடைய ஜனத்தில் மீதியானவர்களை மீட்டுக் கொள்ள திரும்ப இரண்டாம் விசை தமது கரத்தை நீட்டி** (பாபிலோனின் சிறையிருப்பு முடிந்த போது முதல் தடவையாக அவர் செய்தது போல்) **ஜாதிகளுக்கு ஒரு கொடியை ஏற்றி இஸ்ரவேலில் துரத்துண்டவர்களைச் சேர்த்து, யூதாவில் சிதறடிக்கப்பட்டவர்களைப் பூமியின் நான்கு திசைகளிலுமிருந்து கூட்டுவார்.**" (இவை யாவும் 1878 முதல் நடைபெற்று வருகிறது. ஆனால் அதற்கு முன் நடைபெறவில்லை. ஏனெனில் சுவிசேஷயுகத்தில் சிதறடிக்கப்பட்டதற்கு முன் பன்னிரண்டு கோத்திரத்தாரும் பூமியின் நான்கு திசைகளிலும் சிதறடிக்கப்படவில்லை.)

எசேக்கியேல் 36 : 22, 24-லிலும் இஸ்ரவேல் என்ற பெயரால் பன்னிரண்டு கோத்திரங்களையும் தேவன் குறிப்பிடுகிறார். அவர் சொல்லுவதாவது ''**இஸ்ரவேல் வம்சத்தாரை நோக்கி கர்த்தராகிய ஆண்டவர் உரைக் கிறது என்னவென்றால்...... நான் உங்களைப் புறஜாதிகளிடத்திலிருந்து அழைத்து. உங்களைச் சகல தேசங்களிலுமிருந்து சேர்த்து உங்கள் சுய தேசத்திற்கு (அவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட தேசமாகிய பலஸ்தீனா வுக்கு) உங்களைக் கொண்டு வருவேன்....... என்று சொல் என்றார்.**" இந்த திரும்பச் சேர்த்தல் தேவன் அவர்களை சிதறடித்திருந்த புற ஜாதியாரின் காலம் முடியுமுன் நடைபெற வேண்டும். (எரே. 30 : 10, 11; 46 : 27, 28) ''**நான் இஸ்ரவேல் வம்சத்தாரை அவர்கள் போயிருக்கும் ஜாதிகளிடத்திலிருந்து அழைத்து சுற்றிலுமிருந்து அவர் களைச் சேர்த்து அவர்களை அவர்கள் சுயதேசத்திலே வரப் பண்ணி அவர்களை இஸ்ரவேலின் மலைகளாகிய தேசத்திலே ஒரு ஜாதியாக்குவேன். ஒரே ராஜா அவர்கள் எல்லாருக்கும் ராஜாவாக இருப்பார். அவர்கள் இனி இரண்டு ஜாதிகளாக இருப்பதில்லை. அவர்கள் இனி இரண்டு ராஜ்யங்களாகப் பிரிவதுமில்லை.......... அதிலே என்றென்றைக்கும் குடியிருப்பார்கள்.**'' (எசே. 37 : 21, 22, 25).

## டாக்டர் தியோடர் ஹெர்ஸிலின் வேலை

1890-களில் டாக்டர் ஹெர்ஸில் என்பவர் (விசேஷமாக அவர் எழுதிய யூத ராஜ்யம் என்ற புத்தகத்தில்) துன்புறுத்தப்பட்ட யூதருக்கு பலஸ்தீனாவே சுயாதீனமான சொந்த நாடாகும் என்று முன்னறிந்து சொன்ன போது அது இந்த யுகத்தில் நிறைவேறும் நிகழ்ச்சியாகும் என்பதை சிலரே உணர்ந்தனர் அல்லது நம்பிக்கை கொண்டனர். அவர்கள் சீயோனுக்காக புலம்பி அதற்காகக் காத்திருந்தனர். பொதுவாக அவர்கள் அந் நாட்டுக்கு தேவதயவு கிடைக்கும் காலம் உண்மையாகவே வந்து விட்டதென்பதை அறியவில்லை (சங். 102 : 13); சில விஷயங்களைத் தவிர தங்களுக்குக் குறிக்கப்பட்ட காலம் முடிந்ததென்பதையும் (ஏசா. 40 : 2) தங்கள் 'இரட்டிப்பு' நிறைவேறிவிட்டதென்பதையும், தேவதயவு இஸ்ரவேலுக்கு மெதுவாக திரும்ப வந்து கொண்டிருக்கிறதென்பதையும் அவர்கள் உணரவில்லை. 'ஏழுகால தண்டனை' என்ன என்பதை அறியவும் (லேவி. 26 : 18, 21, 24, 28) புறஜாதி யாரின் ராஜ்ய காலமாகிய 'புறஜாதியார் காலம்' முடிந்துவிட்டது என்பதையும் அவர்கள் அறியவில்லை (லூக். 21 : 24); என்றாலும் ஹெர்ஸிலும் அவருடைய கூட்டாளிகளும் - ஏன் என்பதை ஒருவரும் அறியா திருக்கயில், -மாம்ச இஸ்ரவேலரான தேவனுடைய தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களிடத்தில் தேசபக்தியைப் புகுத்தவும், பல நாடுகளில் சீயோனிச சமூகங்களை அமைக்கவும், எதிர்நோக்கியிருக்கும் மிகுந்த அபிவிருத் தியை எல்லா யூதரும் அறிந்து அதில் உற்சாகம் கொள்ளவும் யூதரைக் கேட்டுக் கொள்ள ஆரம்பித்தனர். முதல் சர்வதேச சீயோனிஸ்ட் காங்கிரஸ் கூட்டம் 1897-ல் சுவிட்சர்லாந்திலுள்ள பேசேல் என்னுமிடத்தில் கூடியது. 1900-ல் அரசியல் சம்பந்தமான இந்த சீயோனிச கொள்கை பலரை பலஸ்தீனாவுக்குத் திரும்பும்படி தூண் டியது. சீயோனிசத்தை முன்னேறச் செய்ய ஹெர்ஸிலின் இடைவிடா முயற்சி 1904-ல் அவரது மரணத்தால் சீயோனிச இயக்கம் ஸ்தம்பித்துவிட்டது. அதன் பிறகு அதில் அபிவிருத்தி சிலகாலம் வரை ஸ்திரமற்றதாக இருந்தது. 1909-ல் அதன் தலைவர்கள் அது ஆட்டம் கொடுப்பதைப் பார்த்து அது ஒழிந்து போகுமோ என்று பயந்தனர்.

## புதியதாக உற்சாகமூட்டப்பட்டது

ஆனால் சீயோனிசம் தோல்வியடைந்து போக வில்லை. ஏனெனில் அது சர்வ வல்லமையுள்ள தேவ னால் ஆதரிக்கப்பட்டு வந்தது. யூத ஜனங்களின் புறஜாதி நண்பரும் எபிரெய தீர்க்கத்தரிசனங்களை ஆழ்ந்து படித்தவருமான சார்லஸ் T. ரசல் போதகர் சோர்வடைந்த சீயோனிஸ்ட் இயக்கத்தை எழுப்புதலடையும்படி செய்ய உபயோகிக்கப்பட்டார். ஹெர்ஸிலைப் பற்றியும் சியோ னிஸ இயக்கத்தைப் பற்றியும் யூத உலகம் கேள்விப் படுவதற்கு முன்பே 1889-ல் ரசல் போதகர் 'காலம் சமீபத்திருக்கிறது' (The Time is At Hand) என்ற தமது புஸ்தகத்தை வெளியிட்டார். அதில் 'ஏழு காலங்களின் முடிவு' அல்லது 'புறஜாதியார் கால முடிவு' 1914-ல் என்பதைக் காட்டும் தீர்க்கதரிசனத்தைத் தெளிவாகக் காட்டியிருக்கிறார். தேவனின் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களாகிய இஸ்ரவேலருக்கு வரும் முக்கியமான ஒரு மாறுதலை ''உம்முடைய ராஜ்யம் வருவதாக'' (Thy Kingdom Come) என்ற தமது புஸ்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார். (அது 1891-ல் அச்சிடப்பட்டது). அப்புஸ்தகத்தில் ''இஸ்ரவேலர் திரும்ப வருதல் (The Restoration of Israel) என்ற ஒரு நீண்ட அதிகாரத்தையும் சேர்த்திருக்கிறார் (அந்த இரு புஸ்தகங்களும் இப்போதும் கிடைக்கும்). 1910-ல் ஓவர் லேண்ட் என்ற மாதாந்திரப் பத்திரிக்கையில் (Overland Monthly) தேவனுடைய தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களைப் பற்றி ரசல் போதகர் எழுதிய 12 கட்டுரைகள் வெளியிடப்பட்டன. அது யூத ஜனங்களுக்குள் மிகுந்த ஆச்சரியத்தையும் ஆர்வத்தையும் எழுப்பியது.

## 1910-ல் ஹிப்போட்ரோமில் நடந்த கூட்டம்

1910-ல் பலஸ்தீனாவில் ரசல் போதகர் சீயோனிஸ்ட் ஸ்தாபனத்தைச் சேர்ந்த டாக்டர் லேவி என்பவருடன் சிநேகமாகி, எருசலேமில் கூடிய யூதர் களுக்கு கவர்ச்சிகரமான சொற்பொழிவாற்றி திரும்பி வந்தபின், அமெரிக்காவிலுள்ள சீயோனிஸ்ட் கூட்டத் தினரில் சிலர், டாக்டர் லேவியின் ஆதரவில் நியூயார்க் கிலுள்ள ஹிப்போட்ரோமில் கூடிய யூத கூட்டத்தினருக்கு சொற்பொழிவாற்றுமாறு அழைத்தனர். அவர்களுடைய அழைப்புக் கடிதத்தை எடுத்துக் காட்டுகிறோம்.

| | |
|---|---|
| நியூயார்க்<br>செப்டம்பர் 20, 1910 | New York,<br>September 20, 1910. |
| C.T.ரசல் போதகர்<br>புரூக்கிலின், N. Y. | Pastor C.T. Russell,<br>Brooklyn, N. Y. |

அன்பார்ந்த ஐயா,

கடந்த பல வருஷங்களாக யூத ஜனங்களின் மேலுள்ள தங்கள் அனுதாபமுள்ள ஆர்வம் எங்கள் முன்னின்று அகலவில்லை. கிறிஸ்தவ மதத்தின் பெயரால் எங்கள் ஜாதிக்குச் செய்யப்பட்ட கொடுமைகளைத் தாங்கள் கண்டித்ததால், தாங்கள் எங்களுடைய உண்மையுள்ள நண்பன் என்று நம்புகிறோம். ''எருசலேமும் யூதரின் நம்பிக்கைகளும்''என்பது பற்றிய தங்கள் சொற்பொழிவு எங்கள் ஜனங்களில் பலருடைய மனதைக் கவர்கிறது. என்றாலும் சிறிது காலமாக ஒரு கிறிஸ்தவ ஊழியர் ஒரு யூதனை கிறிஸ்தவனாக்க வேண்டுமென்ற நோக்கம் இல்லாமல், யூதனாக ஒரு யூதனிடத்தில் சிரத்தையுள்ள வராக இருக்கக்கூடுமா என்று நாங்கள் சந்தேகம் கொண்டோம். இந்த எண்ணத்தினாலேயே எங்களில் சிலர் எங்கள் ஜனங்களின் மேலுள்ள தங்கள் அக்கறையின் இயல்பைப் பற்றி பொதுக்கூட்டத்தில் பேசும்படி கேட்டுக் கொண்டனர். தாங்கள் ஆற்றிய சொற்பொழிவு மிக திருப்திகரமாயிருந்ததென்பதைத் தாங்கள் அறிய விரும்புகிறோம். அதில் யூதர்கள் கிறிஸ்தவர்களாகி ஏதாவது ஒரு பிரிவில் அல்லது புரட்டஸ்டாண்டு அல்லது கத்தோலிக்க பிரிவுகளில் சேரவேண்டுமென்று தூண்ட வில்லையென்று எங்களுக்கு உறுதிகூறியிருக்கிறீர்கள்.

அந்த சொற்பொழிவு யூத பத்திரிகைகளில் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது. ஆகையால் நாங்கள் ஒரு ஜாதியாக தங்களைப் பற்றி பயப்பட வேண்டியதில்லையென்று உணர்கிறோம். அதற்கு மாறாக எங்கள் ஜனங்களின் மேலுள்ள தங்கள் சிரத்தையின் அஸ்திவாரம் எங்கள் நியாயப்பிரமாண அத்தாட்சிகளிலும் எங்கள் தீர்க்கத் தரிசனங்களின் செய்திகளிலும் காட்டப்பட்டிருப்பதாகக் கூறியிருக்கிறீர்கள். கிறிஸ்தவர்களுக்கு உரியதல்லாததும் யூதர்களுக்கு உரியதுமான தீர்க்கத்தரிசனங்கள், இன்னும் நிறைவேறாததுமான தீர்க்கத்தரிசனங்கள் இன்றும் இருக்கிறதென்றும் தாங்கள் ஆராய்ந்து தந்திருக் கிறபடி யூத ஜாதி மகிழ்ச்சியடையும்படி அத்தீர்க்கதரிசன நிறைவேறுதல் நெருங்கிக் கொண்டிருக்கிறதென்றும் எங்கள் மூலமாக அது உலகத்தாருக்கும் செல்லக்கூடிய தென்றும் ஒரு கிறிஸ்தவ ஊழியர் ஒப்புக்கொள்வது எங்களுக்கு ஆச்சரியத்தை உண்டாக்குகிறதென்பதை நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

ரசல் போதகரே, இந்தக் காரியங்கள் யூதரின் திரள் கூட்ட கமிட்டியை அமைக்கவும் அந்த பொதுக் கூட்டத்தில் விசேஷமாக எமது ஜனங்களுக்கு சொற்பொழி வாற்றவும் தங்களைக் கேட்டுக் கொள்ளும்படி எங்களைத் தூண்டியது. தாங்கள் இந்த அழைப்பை அன்புடன் ஏற்றுக் கொண்டால் தாங்கள் பேச வேண்டிய பொருள் எது என்பதை நாங்கள் குறிப்பிட எங்களுக்கு அனுமதியுங்கள். அது பொது ஜனங்களுக்கும் விசேஷமாக யூதர்களுக்கும் அதாவது தீர்க்கதரிசனத்திலிருக்கும் சீயோனிசத்தைச் சேர்ந்தவர்களுக்கும் அதிக விருப்பமாயிருக்குமென்று நாங்கள் நம்புகிறோம். கூட்டத்தின் சம்பந்தமாக அக்டோபர் மாதம் 9–ம் தேதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு நடத்தலாமென்று எண்ணுகிறோம். அத்தேதிக்கு நியூயார்க்கிலுள்ள மிகப் பெரிதும் அழகானது மான மண்டபமாகிய ஹிப்போட்ரோம் கட்டிடத்தை கூட்டத்துக்கு ஒழுங்கு செய்திருக்கிறோம். இந்தத் தேதியும் இந்த இடமும் தங்களுக்குப் பிடித்தமாயிருக்குமென்று நம்புகிறோம். மிகுந்த அக்கறையுள்ள திரளான எபிரேயக் கூட்டமும் பொது மக்களிலிருந்து வரக்கூடியவர்களும் வருவார்களென்று உறுதி கூறுகிறோம்.


தங்களிடமிருந்து சீக்கிரம் பதிலறிய விரும்புகி றோம் செலவை நாங்களே ஏற்றுக் கொள்வோம்.

மரியாதை நிறைந்த உங்களுடைய

யூத பெருங்கூட்டத்தினர் கமிட்டி

## மிக உபயோகமான கூட்டம்

4000 பேருக்கும் அதிகமான யூத பிரதிநிதிகள் ஹிப்போட்ரோமில் நடந்த கூட்டத்துக்கு ஆஜராகி அவர்கள் வழக்கத்துக்கு மாறாக தங்களுக்குச் சொந்தமான எபிரேய தீர்க்கத் தரிசனங்களைப் பற்றி ஒரு புறஜாதியான் சொற்பொழிவாற்றுவதைக் கேட்டனர். ரசல் போதகர் தமது பிரசங்கத்தில் தாவீதின் வம்சத்தில் வந்த கடைசி ராஜாவாகிய சிதேக்கியா அடையாளமான தேவனுடைய ராஜ்யத்தின் சிங்காசனத்திலிருந்து நீக்கப்பட்டானென்றும்,




**1910–ம் வருடம் அக்டோபர் 9–ம் தேதி, நியூயார்க்கில் ஹிப்போட்ரோம் என்னும் அரங்கில் யூத பெருங்கூட்டத்தின் மத்தியில் பாஸ்டர் ரசல் பிரசங்கிக்கிறார்.**

அப்பொழுது பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் அவனைத் தோற்கடித்து தேசத்தைப் பாழாக்கினா ரென்றும், பாபிலோனிலிருந்து ஆரம்பமான புறஜாதி ராஜ்யம் (தானி. 2) இஸ்ரவேலர் புறக்கணிக்கப்பட்டிருந்த காலத்தில் புறஜாதியாருக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்த தென்றும், அது உரிமைக்காரரான மேசியா வந்து (எசே. 21 : 25–27) பூமியில் தேவ ராஜ்யத்தை ஸ்தாபிக்கிற வரையில் நீடித்திருக்கும் என்றும், "புறஜாதியார் காலம்" ஏழு காலங்களென்று தீர்க்கத்தரிசனத்தில் சொல்லப் பட்டிருக்கிறதென்றும், வேதாகமத்தில் வேறு இடத்தில் அடையாளமாக சொல்லப்பட்டிருக்கிறதற்கு இசைவாக 7 X 360 = 2520 வருஷங்களைக் காட்டுகிறதென்றும், அது சிதேக்கியா நீக்கப்பட்டதில் ஆரம்பித்து 1914 வரை இருக்கிறதென்றும், அப்போது அது மகா உபத்திரவ காலத்தோடு முடிவடையுமென்றும், தேவனுடைய தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களாகிய இஸ்ரவேலரின் மத்தியில் தேவராஜ்ய ஸ்தாபிதத்துக்கு அது ஆயத்தமென்றும், இஸ்ரவேலர் மனிதரின் மத்தியில் அதன் முக்கிய பிரதிநிதிகளாகவும் கருவிகளாகவும் இருப்பார்களென்றும்; ஆபிரகாமுக்கு அளித்த வாக்குத்தத்தத்தின்படி (ஆதி. 22 : 16–18) அவர்கள் மூலம் எல்லா ஜாதிகளும் ஆசீர் வதிக்கப்படுவார்களென்றும் கூறினார். ரசல் போதகரின் பிரசங்கத்தின் ஆரம்பத்தில் சந்தேகத்துடன் அமைதியாக இருந்த பலர் தங்கள் வேத புஸ்தகத்தின் வெளிச்சத்தில் அவர்களுக்குப் புது நம்பிக்கையைத் தூண்டியதால் அவர்கள் தங்களுடைய கைகளைத் தட்டி மகிழ்ந்தனர். ஹிப்போட்ரோம் கூட்டத்தில் அவரது பிரசங்கத்தைக் கேட்டவர்களில் பல யூத ரபிகளும், போதகர்களும், வழக்கறிஞர்களும் பதிப்பாசிரியர்களும் இருந்தனர். அவர்கள் யாரெனில் அமெரிக்க எபிரேயரான டாக்டர் ஜேக்கப்ஸ், எபிரேய பத்திரிகை ஆசிரியர்களான W.J. சாலொமோனும் J. பிராட்ஸ்கியும், மெக்காபீனைச் சேர்ந்த லூயிஸ் லிப்ஸ்கி, வார்ஹீட்டைச் சேர்ந்த AB லாண்டோ, யூத வாராந்தர பத்திரிகை ஆசிரியரான J. பெவ்வர், ஜீயிஸ் ஸ்பிரிட்டைச் சேர்ந்த S. டயமண்ட், ஜீயிஸ் பிக் ஸ்டிக்கைச் சேர்ந்த J. பரோண்டஸ்,

H.Yom-ஐச் சேர்ந்த Mr. கோல்ட்மேன், ருமேனிய சொசையிட்டி பிரஸிடெண்டான லியோ ஓல்ப்சன் ஆகியோராவார்.

## மதசம்பந்தமான சீயோனிஸ இயக்கம் துவங்கிற்று

ஹிப்போட்ரோமில் நடந்த இந்த பெரிய கூட்டத் துக்குபின் ரசல் போதகர் ரஷ்யாவிலும் ஐரோப்பாவிலும் பல யூத கூட்டங்களில் இதே பொருள் பற்றிப் பேசினார். சீயோனிசம் என்ற அவரது புஸ்தகத்தைப் பலர் வாங்கினர். ஏராளமான பேர் ஆர்வம் கொண்டதால் Die Stimme (டை ஸ்டிமி) என்ற விசேஷித்த செய்தித்தாளை Yiddish (இட்டிஸ்) பாஷையில் பிரசுரித்தார். அவருடைய மாதாந்தர பிரசங் கங்களும் 2000-த்துக்கு அதிகமான செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்பட்டு பல யூதர்கள் உள்பட 10 000 000 வாசகர்களுக்கு வாராவாரம் கிடைத்து வந்தது. இவ்வாறு அவரும் அவருடன் ஒத்துழைப்பவர்களும் அதுவரை அரசியல் இயக்கமாயிருந்து வந்து சோர்வடைந்திருந்த சீயோனிஸ்ட் இயக்கத்தை உயிரடையச் செய்தனர்; சில வருஷங்களில், தீர்க்கதரிசனங்களையும் ஆபிரகாமுக்கு அளிக்கப்பட்ட வாக்குத்தத்தையும் எடுத்துக் காட்டுவதின் மூலம் (ஆதி. 22 : 16-18) சீயோனிசத்தை மத சம்பந்தமாக (மதமாற்றமடைய அல்ல) திரும்ப தூண்டி விட்டு படிப்படியாக அந்த எண்ணத்தைப் பிரகாசிக்கச் செய்தனர். தனது சோர்வினால் உலர்ந்த எலும்புகளுள்ள பள்ளத்தாக்கைப் போல் காணப்பட்ட சீயோனிசத்திற்கு, இது புதிய ஆவியையும் ஆர்வத்தையும், புதிய ஜீவ னையும் பெலத்தையும் கொடுத்தது. நாம் பார்க்கிற விஷயத்தின் இந்த அம்சம் தான் எசேக்கியேலின் தரிச னத்தில் சித்தரித்துக் காட்டப்பட்டிருக்கிறது. (எசே. 37 : 1-14) அதில் ஒரு பகுதி கீழ்கண்டவாறு கூறுகிறது.

‘‘**கர்த்தருடைய கை என்மேல் அமர்ந்து கர்த்தர் என்னை ஆவிக்குள்ளாக்கி வெளியே கொண்டு போய் எலும்புகள் நிறைந்த ஒரு பள்ளத்தாக்கின் நடுவில் நிறுத்தி............. அவைகள் மிகவும் உலர்ந்ததுமாயி ருந்தது................. நீ இந்த எலும்புகளைக் குறித்துத் தீர்க்கத் தரிசனம் உரைத்து அவைகளைப் பார்த்துச் சொல்ல வேண்டியது என்னவென்றால் உலர்ந்த எலும்புகளே கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்............ நான் உங்கள் மேல் நரம்புகளைச் சேர்த்து உங்கள் மேல் மாம்சத்தை உண்டாக்கி உங்களைத் தோலினால் மூடி உங்களில் ஆவியைக் கட்டளையிடுவேன்............. அப்பொழுது ஆவி அவர்களுக்குள் பிரவேசிக்க அவர்கள் உயிரடைந்து மகா பெரிய சேனையாய் நின்றார்கள். அப்பொழுது அவர் என்னை நோக்கி ................ இந்த எலும்புகள் இஸ்ரவேல் வம்சத்தார் அனைவருமே. இதோ அவர் நம்பிக்கை அற்றுப் போயிற்று ....... என்கிறார்கள் ....... ஆகையால் நீ தீர்க்கதரிசனம் உரைத்து அவர்களோடே சொல்ல வேண்டியது........ என் ஜனங்களே என் ஆவியை உங்களுக்குள் வைப்பேன் நீங்கள் உயிரடைவீர்கள். நான் உங்களை உங்கள் தேசத்தில் வைப்பேன் அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வீர்கள். இதைச் சொன்னேன் இதைச் செய்வேன் கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்**’’.

## உலகயுத்தம் – ஒரு தீர்க்கதரிசனம் நிறைவேறியது

ரசல் போதகரும் அவருடன் ஒத்துழைப்பவர்களும் வாக்குத்தத்தங்களையும், தீர்க்கதரிசனங்களையும் அவற்றின் நிறைவேறுதல்களையும் எடுத்துக்காட்டி சீயோனிசத்தை புத்துயிரடையச் செய்தாலும் பலர் சீயோனிசம் நடைமுறைக்கு வருவதில் சந்தேகம் கொண் டனர். ஏனெனில் பலஸ்தீனா இன்னும் துருக்கியரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. 1879 முதல் யூதர்கள் பலஸ் தீனாவுக்குத் திரும்பிவர துருக்கி அனுமதியளித்திருந் தாலும் அவர்கள் சீயோனிச நம்பிக்கைக்கு அனுகூல மாயில்லை. அதோடு தேசம் வெறுமையாகக் கிடந்தால் எத்தனை யூதர் தங்கள் ஜீவனோபாயத்தை அங்கு தேடிக் கொள்ளக் கூடும் என்று அறிவது கடினமாயிருந்தது. இவ்வாறு சீயோனிசம் நடைமுறைக்கு வருவதைப் பற்றிய சந்தேகம் கொண்டவர்கள் தாம் தெரிந்துகொண்ட ஜனங்களாகிய மாம்ச இஸ்ரவேலருக்குரிய அவரது ஏற்பாட்டைப் பற்றிய அறிவில்லாமல் அவ்விதம் சந்தேகம் கொண்டனர். மேலும் பலர் புறஜாதியார் காலம் 1914-ல் முடிவதில் சந்தேகம் கொண்டனர். 1914 வந்ததும் அதை எதிர்பார்த்தனர். ரசல் போதகர் முன்னறிவித்தபடி புறஜாதியார் காலம் முடிந்து இஸ்ரவேலர் தாய்நாடு திரும்புவதற்கு தேவன் தயவு காட்டுகிறார் என்றும் காட்ட 1914-ல் உலக விஷயத்தில் ஏதாவது பெரிய மாறுதல் ஏற்பட்டதா?

ஏழுகாலங்கள் (2520 வருஷங்கள்) முடிந்து விட்டது என்பதை நிரூபிக்கிற அத்தாட்சி முதல் உலக யுத்தமென்று வழக்கமாக அழைக்கப்படுகிற உலக யுத்தத்தின் முதல் கட்டம், திடீரென்று யுத்தம் ஆரம்பித் ததால் ஏற்பட்டது. கி.மு 607 ஐந்தாவது சந்திர மாதம் பத்தாவது நாளில் எருசலேமிலிருந்த ஆலயமும் ராஜாவின் அரமனையும் பாபிலோனியரால் இடிக்கப் பட்டது (எரே. 52 : 12, 13) இங்கு சரியாக 2520 வருஷங்களுக்குப் பின் ஐந்தாவது சந்திரமாதத்தின் பத்தாவது நாளில், (ஆகஸ்ட் 1, 1914) “**உலகமுண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும் இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திர காலத்தின்**” (தானி. 12 : 1; மத். 24 : 21) ஆரம்பக் கட்டமாக உலக யுத்தம் ஆரம்பமானது. தேவராஜ்யத்தை உலகத்தில் ஸ்தாபிப் பதற்கு ஆயத்தமாக அது உலக ராஜ்யங்களை அழித்து கொண்டிருக்கிறது. இங்கு தீர்க்கதரிசனத்தின் குறிப்பிடத் தக்க நிறைவேறுதல் உண்மையாகவே நடைபெற்றிருக் கிறது. அதற்கு 25 வருஷங்களுக்கு முன்னதாகவே உபத்திரவகாலம் 1914-ல் ஆரம்பமாகுமென்று ரசல் போதகர் தீர்க்கதரிசனங்களிலிருந்து திட்டவட்டமாக முன்னறிவித்திருக்கிறார்.

## பிரிட்டிஷ் பலஸ்தீனப் போர்

1917 டிசம்பரில் எருசலேம் துருக்கியரிடமிருந்து பிடிபட்டபோது யூதர்கள் மாத்திரமல்ல உலகம் முழுவதுமே மிகுந்த ஆச்சரியமடைந்தது. இதில் ஏதோ அசாதார ணமானதும் குறிப்பிடத்தக்கதுமான காரியம் இருக்கிற

தென்று ஒவ்வொருவரும் உணரலாயினர். ஒவ்வொரு பட்டணமும் குன்றும் கண்டுபிடிக்கப்பட்ட விதத்தைப் பற்றி அறிய யாவரும் ஆவலாயிருப்பதைப் போல் எருசலே மைப்பற்றியும் அறிய ஆவலாயிருக்க பலஸ்தீனப் போரில் அறிக்கைகள் தெரிவிக்கிறபடி பிரிட்டிஷ் படைகள் வேறு எந்த போர்க்களத்திலும் இல்லாத விதமாய் புதுமையான முறையில் வெற்றியடைந்தது. உலகமெங்குமுள்ள பத்தி ரிக்கை வாசகர்கள் அதிக கவனமும் ஆத்திரமுமுள்ளவர் களாயிருந்ததால் பத்திரிகை நிருபர்கள் வேதாகமத்தைப் புரட்டிப் பார்த்து தற்கால நிகழ்ச்சிகளுக்குப் பொருந்தும் பழைய ஏற்பாட்டு கால நிகழ்ச்சிகளைக் கண்டு இஸ்ரவேலரின் பூர்வீக சரித்திர காலத்தில் இதே யுத்தக் களத்தில் சம்பவித்த நிகழ்ச்சிகளை பத்திபத்தியாக கேபிள் மூலம் அனுப்பி வந்தனர்.

முரடரான துருக்கியரிடமிருந்து பலஸ்தீனா பறிக்கப்பட்டதால் சீயோனிசத்தின் நம்பிக்கைகள் மிகவும் புத்துயிரடைந்தது. எருசலேம் பிடிக்கப்பட்டது, யூதர் களுக்கு - விசேஷமாக தங்கள் முற்பிதாக்களின் தேசத்தில் வாஞ்சை உள்ளவர்களாய் இருந்தவர்களாய், ஜெபிக்கும் போதெல்லாம் எருசலேமுக்கு நேராகத் தங்கள் முகங்களைத் திருப்பி ஜெபித்து வந்தவர்களுக்கு (1 ராஜா. 8 : 46-53; 2 நாளா. 6 : 36-39) மரித்தவர்களை கிழக்கு முகமாக அடக்கம் செய்தவர்களுக்கு, தங்களுக்குச் சொந்தமல்லாத அயல் நாட்டில் சொற்பக்காலம் தங்குகிறவர்கள் என்பதற்கும், அலைந்து திரிகிறவர்கள் என்பதற்கும், யாத்ரீகர்கள் என்பதற்கும் ஊமை அத் தாட்சியாக தாங்கள் கட்டிய வீட்டில் ஒரு பகுதியை கட்டி முடியாமல் குறையாகப் போட்டவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொண்டு வந்தது. உலக பெரும் பணக்காரரில் ஒருவரும் லேவா தேவிக் காரருமான லார்ட் ரோத்சைல்ட் என்பவரும் தாம் சிதறடிக்கப்பட்ட ஒருவர் என்றும் தனது வசிப்பிடம் தற்காலிகமானதென்றும், இஸ்ரவேலர் ஒரு காலத்தில் தங்கள் கூடாரங்களைச் சுருட்டிக் கொண்டு தங்கள் சொந்த நாட்டுக்குப் போக வேண்டியதாகும் என்றும் தான் கொண்டுள்ள நம்பிக்கைக்கு அடையாளமாக அரண்மனை போன்ற தமது வீட்டில் ஒரு தூணை முற்றும் முடியாமல் அறைகுறையாக விட்டிருந்தார்.

## இஸ்ரேலுக்கு தேவ தயவின் காலம் வந்துவிட்டது

## எருசலேம் எவ்வாறு விடுவிக்கப்பட்டது

1917 டிசம்பர் 9-ல் குண்டுகளைப் பிரயோகிக் காமலும் துப்பாக்கியால் சுடாமலும் பரிசுத்த கட்டடங்களில் ஒன்றையும் இடிக்காமலும் எருசலேம் விடுவிக்கப்பட்டது ஒரு அதிசயமேயன்றி வேறல்ல. இயற்கை கோட்டையாக அல்லது பலத்த அரணாக எருசலேம் வெல்ல முடியாத ஓரிடமாக இருந்தது. துருக்கிய படை எதிரிகள் அணுக முடியாமல் வெகு காலம் தடுக்கக் கூடியதாயிருந்ததால் நகரத்தில் குண்டு வீசப்பட்டு ஏழுகாலங்களின் ஆரம்பத்தில் (1914-க்கு 7 X 360 அல்லது 2520 வருஷங்களுக்குமுன்) கி.மு. 607-ல் நேபுகாத்நேச்சாரால் தரை மட்டமாக்கப் பட்டதற்கும் அல்லது யூதயுக முடிவில் தீத்து ராயனாலும் ரோம படையாலும் அழிக்கப்பட்டதற்கும் மோசமாக அழிக்கப்படக் கூடியதாயிருந்தது. ஆனால் இஸ்ரவே லுக்குத் தயவு காட்டும் தேவனின் வேளை வந்துவிட்டதால் அவர் எருசலேமை அழிவினின்று விலக்கினார். நகர மானது பயங்கரமானதும் தகுந்த ஆயுதங்களையு டையதுமான துருக்கிய படைகளால் பாதுகாக்கப்பட்டாலும் ஒரு குண்டு முதலாய் சுடாமல் பிடிக்கப்பட்டது. போர் நிறுத்த உடன்படிக்கை முடிகிறவரையில் எருசலேம் எளிதில் பிடிபட்ட விவரம் வெளியாகவில்லை. அதைப் பற்றிச் சொல்லப்படுவதாவது, ஜெனரல் அலன்பீ என்பவர் தமது படையுடன் நெருங்கி வந்தார். சேதமின்றி நகரத்தைப் பிடிப்பது எப்படியென்று யோசிக்கலானார். நகரத்தை அழிக்க அவர் விரும்பவில்லை. பரிசுத்த மதில்களுக்குள் நாசவேலை செய்வதையும் ரத்தம் சிந்துவதையும் அவர் அருவருத்தார். ஆனால் யுத்தம் யுத்தமே. அவர் செய்ய வேண்டிய கடமை ஒன்றிருந்தது. இவ்வாறு அவர் சேதமின்றி நகரத்தைப் பிடிக்க திட்டம் வகுக்க முயன்று கொண்டிருந்தபோது எதிரி ஒருவன் துருக்கிய தளபதியிடம் ஓடிவந்து பலத்த ஒரு படை நெருங்கி வருகிறதென்றும் அது பலம் பொருந்திய ஜெனரல் அல்லா-பே என்பவரால் (Allenby) நடத்தப்பட்டு வருகிறதென்றும் சொன்னான். ஒரு பெயருக்கு பின்னால் வருகிற Bey என்ற துருக்கிய பட்டப் பெயர் ஒரு விசேஷித்த மதிப்பை அல்லது அந்தஸ்த்தைக் காட்டுகிறதாகும். இந்தச் செய்தி மூட நம்பிக்கையுள்ள துருக்கிய படைகளுக்குள் விரைவில் பரவியது. அலன்பி (Allenby) என்ற மாந்திரிகப் பெயரை அல்லா-பே (Allah-Bey) என்ற பெயராக நினைத்தனர். அந்தப் பெயர் அராபிக் பாஷையில் அல்லா நபி (Allah Nabi) என்பதாகும். அதற்கு அல்லா வின் தீர்க்கதரிசியென்று பொருள்படும். அவர்கள் பரிசுத்த மாக நினைக்கும் பெயரைக் கேள்விப்பட்டதும் பயந்து அல்லாவின் கோபத்துக்குள்ளாவோம் என்றெண்ணி, அல்லாவின் தீர்க்கதரிசிக்கு எதிராக யுத்தம் செய்ய மறுத்தனர். நிலைமையை சரிக்கட்ட முடியாமல் “அல்லாபே” வருமுன் நகரத்தை விட்டுக் காலியாகும்படி தளபதி கட்டளையிட்டார்.

அமைதியாக கால்நடையாக பட்டணத்துக்குள் பிரவேசித்து அதைக் கைவசப்படுத்தியபின் ஜெனரல் அல்லன்பே பட்டினி கிடந்த ஜனங்களுக்கு ஆகாரம் கொடுத்து அவரவர் வேலையை அமைதியாகச் செய்யும் படி அனுமதியளித்தார். அதன்பிறகு அவர் தனது படையுடனும் யூத கொடியின் கீழ் யுத்தம் செய்த யூத படையுடனும் பலஸ்தீனாவின் மற்ற இடங்களிலுள்ள துருக்கியரை அப்புறப்படுத்தினர். ஆனால் இந்தப் பெயர் இறுதியில் அதன் மாந்திரீகத் தன்மையை இழந்தது. துருக்கியர் அந்தப் பெயரை சரியாக அறிந்து கொண்ட பின் அதிக எதிர்ப்புச் செய்தனர். என்றாலும் அவர் வடக்கு நோக்கிச் சென்று இலையுதிர் காலத்தில் தமஸ்குவைப் பிடித்துக் கொண்டார். இரண்டு வாரத்துக்குள் யூத படை தமஸ்கு பக்கத்திலிருக்கும் தாவீது-சாலொமோன் கால

எல்லைக்கு அப்பால் துருக்கியரை விரட்டியடித்தனர். இவ்வாறு நூற்றுக்கணக்கான வருஷங்களாக, துருக்கியரிடமிருந்த இந்த நாட்டை இஸ்ரவேலருக்கு முன்பாக விடுதலை செய்தனர். பொதுவான போர்நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. நாலு வருஷங்களாக மூண்டு கொண்டிருந்த போர் உலகெங்கும் திடீரென்று நிறுத்தப்பட்டது. "இந்நிகழ்ச்சி நான் தெரிந்து கொண்ட என் ஜனங்களின் சம்பந்தமாக கொண்ட முக்கிய நோக்கம் இப்போது முடிவடைந்தது. ஆகையால் உங்கள் சண்டையை நிறுத்துங்கள். இஸ்ரவேலர் போய் தங்கள் சுய தேசத்தைக் கட்டட்டும்" என்று தேவன் சொன்னது போலிருந்தது.


## உலகயுத்தம் சீயோனிசத்துக்கு அனுகூலமாயிற்று

இவ்வாறு உலக யுத்தத்தின் முதல் கட்டம் (1914-1918) யூதர்கள் தங்கள் சுயநாடு திரும்புவதற்கு மிகுந்த அனுகூலமானதாயிற்று. அது பலஸ்தீனத்தை துருக்கியின் கொடுங்கோல் ஆட்சியிலிருந்து விடுவித்தது மாத்திரமல்ல சீயோனிச இயக்கத்துக்கு உதவி செய்யும்படி பிரிட்டனை வற்புறுத்துவதாகவும் இருந்தது. டாக்டர் சேய்ம் விஸ்மேனின் முயற்சியினால் 1917 நவம்பர் 2-ல் பிரிட்டன் பால்ஃபோர் அறிக்கை என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டது. அது பலஸ்தீனாவில் யூதரின் தேசிய வரைப் படத்தை ஸ்தாபிக்க உறுதிமொழியளித்ததோடு இதைச் செய்து முடிப்பதில் அதிக முயற்சி செய்வதாகவும் உறுதி கூறியது. மற்ற நேசநாடுகளும் இதற்கு சம்மதித்தன. இவ்வாறு இஸ்ரவேலர் மிக வேகமாக முன்னேறவும் சுயநாடு திரும்பவும் வழி திறந்தது.

முதல் உலக யுத்தம் முடிந்தபின் 1920 ஏப்ரலில் சேன்ரிமோவில் நடந்த நேசநாடுகளின் கூட்டத்தில் பலஸ்தீனாவை நிர்வகிக்கும் அதிகாரம் பிரிட்டனுக்கு அளிக்கப்பட்டது. இந்த நிர்வாக உரிமை 1922-ல் சர்வதேச சங்கத்தில் உறுதி செய்யப்பட்டது. 1923 செப்டம்பர் முதல் அது அமுலுக்கு வந்தது. இதன்படி யூதர்கள் யாதொரு கட்டுப்பாடும் இல்லாமல் பலஸ்தீனாவுக்கு வந்திருக்க வேண்டும். ஆனால் அப்படியல்ல, பலஸ்தீனாவிலுள்ள அரபியரின் எதிர்ப்பும் தொல்லையும் அதிகமாயிருந்ததால் அங்கு வந்து இறங்குகிறவர்களின் தொகை பிரிட்டிஷாரால் மட்டுப்படுத்தப்பட்டது. அப்படியிருந்தாலும் உரிய காலத்தில் கர்த்தர் பிரிட்டனின் மேல் நெருக்கடியை வரவிட்டதால் (இரண்டாவது உலக யுத்தத்தின் மூலம்) அதிக கட்டுப் பாடில்லாமல் இஸ்ரவேலர் சுயதேசம் திரும்ப அனுமதியளித்தது.

## அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஜாதி

பல வருஷங்களாக நடைபெற்ற பேச்சு வார்த்தைகளுக்கும் பிரிட்டீஷ் மேற்பார்வை முடிந்ததற்கும் பின் 1948 மே மாதத்தில் இஸ்ரவேல் ராஜ்யம் ஸ்தாபிதமாயிற்று. அது முதல் பல்லாயிரக்கணக்கான யூதர் விமானத்திலும் கப்பல்களிலும் பலஸ்தீனாவுக்குத் திரும்பி வந்தனர். 1950-ல் இஸ்ரவேல் பார்லிமெண்டு வெளியிட்ட "திரும்பவருவதற்குரிய சட்டத்தின்படி" (the Law of the return) திரும்பி வர விருப்பமுள்ளயாவரும் வரும்படி இஸ்ரவேலின் வாசல் திறக்கப்பட்டது. 64 நாடுகளிலிருந்து யூதர் திரும்பி வந்திருக்கிறார்களென்றும் இப்போது பலஸ்தீனாவில் 7600000 யூதர்கள் இருக்கிறார்களென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. 1948-49-ல் அரபியரோடு நடந்த யுத்தத்தில் யூதர்கள் வெற்றி பெற்றனர். பரிசுத்த நாட்டிலிருந்து அரபியரை வெளியேற்ற தேவன் இஸ்ரவேலருக்குத் தொடர்ந்து உதவி செய்வார். தீர்க்கத்தரிசனங்கள் உறுதியாகக் கூறுகிறபடி தேவன் நாடு முழுவதும் இஸ்ரவேலருக்குச் சொந்தமாகவும் நாட்டின் எல்லைகள் தாவீது மற்றும் சாலொமோன் காலத்தில் இருந்த அளவு விரியவும் உதவி செய்வார்.



எருசலேம் பூமியின் மீது வரவிருக்கும் ராஜ்யத்தின் தலைநகரமாக இருக்கும்

## பாழாய்க் கிடந்த நாடு திரும்பக் குடியேற்றப்பட்டது

உலக யுத்தத்தின் முதல் கட்டம் (1914-1918) பொருளாதார விஷயத்தில் பாலஸ்தீனாவை மோசமான நிலைமையில் இருக்கச் செய்தது. துருக்கியப் படைகள் நாட்டைக் கொள்ளையடித்துப் பாழாக்கியது. முந்தின நூற்றாண்டுகளில் துருக்கியரும் அரபியரும் ஈவிரக்கமின்றி காடுகளை அழித்து நாட்டின் வளத்தைப் பாழாக்கி நில அரிப்பைத் தடுக்க யாதொன்றும் செய்யாமல் விட்டனர். 1918-ல் நாட்டில் பாதி பாழ் நிலமாகப் பாவிக்கப்பட்டது. ஆனால் காரியாதிகள் முடிவான நல்ல நிலமைக்கு வரவேண்டியதாயிற்று. அவர்களை சிறையிருப்பிலிருந்து திரும்பி வரவும் அங்கு சுகமாக தங்கியிருக்கவும் செய்வேன் என்று தேவன் வாக்களித்திருக்கிறார் (எரே. 32 : 37, 41-44); மேலும் ஆமோ. 9 : 14, 15-ல் "**என் ஜனமாகிய இஸ்ரவேலின் சிறையிருப்பைத் திருப்புவேன். அவர்கள் பாழான நகரங்களைக் கட்டி, அவைகளில் குடியிருந்து, திராட்சத் தோட்டங்களை நாட்டி அவைகளுடைய பழரசத்தைக் குடித்து, தோட்டங்களை உண்டாக்கி அவைகளின் கனிகளைப் புசிப்பார்கள். அவர்களை அவர்கள் தேசத்திலே நாட்டுவேன்: நான் அவர்களுக்குக் கொடுத்த தேசத்திலிருந்து அவர்களை இனிப்பிடுங்கப் படுவதில்லை**" என்றும் வாக்களித்திருக்கிறார் (யாக்கோபின் சந்ததிக்கு நித்திய சுதந்தரமாக அளிக்கப்பட்ட நாடு - ஆதி. 48 : 4; 17 : 8). உலகமே

ஆச்சரியப்பட்டு உறையும் விதமாக, உலகத்தின் கண்களுக்கு முன்பாக இந்த தீர்க்கதரிசனங்கள் அற்புதமாக நிறைவேறிக் கொண்டிருக்கின்றன. வெளிநாட்டிலிருந்து திரும்பி வருகிறவர்கள் எங்கெங்கு குடியேறுகிறார்களோ அங்கெல்லாம் தேவ ஆசீர்வாதத்தால் விஞ்ஞான விவசாயத்தின் மூலமும், பழ உற்பத்தி மூலமும் நாட்டை பழைய செழிப்புக்கு திரும்பக் கொண்டு வருகிறார்கள். நூற்றுக்கணக்கான வருஷங்களாக காய்ந்து கிடந்த சாலோமோனின் குளங்கள் 1927-ல் பொங்கிவடிய ஆரம்பித்தன. அந்தக் குளங்களில் 60,00,000 கேலன் தண்ணீர் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. அந்நேரத்தில் இந்த அற்புத செயலுக்காக நன்றி கூறும்படி ஒருநாள் பொது ஜன விடுமுறையளிக்கும்படி பலஸ்தீன ஹை கமிஷனர் கேட்டுக் கொள்ளப்பட்டார். பல நூற்றாண்டுகளாக முன் மாரி அற்ப சொற்பமாகவும், பின்மாரி அறவே இல்லாமலும் இருந்தது. ஆனால் அறிக்கை கூறுகிறபடி நாட்டை மகிழச் செய்ய அவை திரும்பி வந்தன. அதன் பலனாக பலஸ்தீனாவில் சில பகுதிகள் இரண்டு மூன்று போகம் பயிர் செய்யப்படுகிறது. நீர்ப்பாசான, வடிகால் வசதிகள் மூலம் சதுப்பும், வறண்டதும் மலேரியா பரவியிருந்ததுமான லட்சக்கணக்கான ஏக்கர் நிலம் வளம் பொருந்திய நாடாக மாற்றப்பட்டிருக்கிறது. உதாரணமாக விஸ்தாரமானதும் சதுப்பு நிலமானதும் மலேரியா நிறைந்ததுமான எஸ்ரலோன் பள்ளத்தாக்கு ஏதேன் தோட்டத்தைப் போல் மாற்றப்பட்டிருக்கிறது. பலஸ்தீனாவிலுள்ள பழங்கள் உதாரணமாக ஆரஞ்சுப் பழங்கள் உலகத்தின் எந்த நாட்டிலுள்ள பழங்களையும் விட மிகவும் உயர்ந்தது என்று கருதப்படுகிறது. கடந்த வருடத்தில் இஸ்ரவேல் நாட்டில் சுமார் 18,000 டன் ஒலிவக் கொட்டைகள் சேகரிக்கப்பட்டிருக்கிறது இது சமீபகாலத்திலுள்ள மிகுந்த விளைச்சலாகும் இப்போது 1000 ஒலிவ எண்ணெய் ஆலைகள் வேலை செய்து ஏராளமான எண்ணெய் உற்பத்தி செய்கிறது. ''**இஸ்ரவேலே தேவன் உங்களுக்கு முன்மாரியையும் பின்மாரியையும் ஏற்கனவே வருஷிக்கப் பண்ணுவார். களங்கள் தானியத்தால் நிரம்பும் ஆலைகளில் திராட்சரசமும் எண்ணெயும் வழிந்தோடும்**''. (யோவே. 2 : 23, 24)

பலஸ்தீனாவுக்கு வெளியில் விசேஷமாக அமெரிக்காவிலுள்ள யூத ஸ்தாபனங்கள் தங்கள் சுய நாட்டில் இஸ்ரவேலரைத் திரும்பக் குடியேற்றுவதற்கு அதிக உதவி செய்திருக்கின்றன. இந்த யூத ஸ்தாபனங்கள் அமெரிக்காவில் மாத்திரம் கடந்த பத்து வருஷங்களில் இஸ்ரவேலில் நடைபெறும் அன்பளிப்பு வேலைக்காக ஒரு கோடி டாலருக்கு மேல் சேகரிக்கப்பட்டிருக்கிறது. பிரமாண்டமான முறையில் கட்டடங்கள் கட்டப்படுகின்றன. எரே. 31 : 38-40-ல் சொல்லப்பட்டிருக்கிறபடி எருசலேம் விரிவடைந்து வருகிறது. 1910-ல் (Tel-Aviv) டெல் அவிவ்-வில் சில கூடாரங்கள் மாத்திரம் இருந்தன. இப்போது அது ஒரு துறைமுகமாக 4,00,000 ஜனத்தொகையுள்ளதாயிருக்கிறது. ஹாய்பா ஒரு சிறு கிராமமாக இருந்தது. இப்போது அது மத்தியதரைக் கடற்கரையிலுள்ள அழகிய துறைமுகமாயிருக்கிறது. உண்மையாகவே ''**அவர்கள் நெடுங்காலம் பாழாய்க் கிடந்தவைகளைக் கட்டி, பூர்வத்தில் நிர்மூலமானவைகளை எடுப்பித்து, தலைமுறை தலைமுறையாய் இடிந்து கிடந்த பாழான பட்டணங்களை புதிதாய்க் கட்டுவார்கள்**''. (ஏசா. 61 : 4)

யூதர்கள் விரைவில் பட்டணங்களைக் கட்டி நாட்டை மிக செல்வம் மிகுந்ததாக்குவார்கள். உலகமெங்குமுள்ள அமைதியின்மை புறஜாதி நாடுகள் மேல் கொண்டுவரும் மகா உபத்திரவத்தின் கட்டங்களில் சிக்கித் தவிக்கும் போது, கோடிக்கணக்கான பணத்தை பலஸ்தீனாவுக்கு அனுப்பி அங்கு பத்திரமாயிருக்கும்படி அங்கு சேமித்து வைக்க ஐசுவரியவான்களான பல இஸ்ரவேலரைத் தூண்டும். புரட்சியும் அரசின்மையும் நடைபெற்று புறஜாதியாரில் அநேகர் கொல்லப்பட்டபின் (எரே. 25 : 33) யூதர் சமாதானமாகவும் பத்திரமாகவும் வாழும்போது ஐரோப்பிய, ஆசியா, ஆப்பிரிக்க நாட்டிலுள்ள மீதியானவர்கள் இஸ்ரவேலர் செழிப்புடனிருப்பதைப் பார்த்து அவர்களைக் கொள்ளையடிக்கும்படி தூண்டப்படுவார்கள். அதன்மூலம் அவர்கள் யாக்கோபின் உபத்திரவத்தின் இரண்டாவது கட்டத்தை (எரே. 30 : 4-8) அதாவது இஸ்ரவேலரின் கடைசி உபத்திரவத்தைக் கொண்டு வருவார்கள். ஆனால் அவர்களின் மேசியா ஆச்சரியமான விடுதலையளிப்பதினால் (எசே.38 : 18-39; 29) அவர்கள் ஒருமனப்பட்டு கர்த்தரிடம் திரும்புவார்கள். (சகரி. 12 : 9, 10) அதன் பிறகு பரிசுத்த நாடு வாதத்துக்கு இடமில்லாமல் அவர்களுடையதாகும். இவ்வாறு தங்கள் சுய நாட்டில் ஒரு ஜாதியாக உலகின் மனுக்குலத்துக்கு ஆதாரமாக, முதலாவதாக அவர்கள் மத்தியில் ஸ்தாபிக்கபட இருக்கும், ஆயிர வருஷ ராஜ்யத்தின் பூமிக்குரிய அம்சத்தைப் பெற தகுதியுள்ளவர்களாக்கப்பட்டு காத்துக் கொண்டிருக்கின்றனர்.

## வரப்போகும் ராஜ்யத்தின் தலைநகர்

சில புறஜாதி அரசாங்கங்களின் பலத்த எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் இஸ்ரவேலின் தலைநகர் அயல்நாட்டு மந்திரிகள் காரியாலயங்கள் உட்பட டெல் அவிலில் இருந்து மாற்றப்பட்டு எருசலேமில் ஸ்தாபிதம் செய்யப்பட்டிருப்பது கவர்ச்சிகரமான ஒரு காரியமாகும். அது இருக்கவேண்டிய பிரகாரம் இருக்கிறது. ஏனெனில் சமாதானமான ஆட்சியுடன் சீக்கிரத்தில் ஸ்தாபிதமாகும் புதிய சகாப்தத்தில் "**சீயோனிலிருந்து வேதமும் எருசலேமிலிருந்து கர்த்தருடைய வசனமும் வெளிப்பட வேண்டும்**" (ஏசா. 2 : 3). எருசலேமிலிருந்துதான் வெளிப்பட வேண்டும், டெல்-ஆவிவிலிருந்து அல்ல. எருசலேமை சர்வதேச அதிகாரத்தின் கீழ் வைத்துக் கொள்ள வேண்டுமென்ற ஐக்கிய நாட்டு திட்டத்தின்படி இஸ்ரவேலின் தலைநகர் டெல்-ஆவிவில் இருக்க வேண்டுமென்று அது உத்தரவிட்டபடி டெல்-ஆவிவில் இருந்ததில்லை.

"**உம்முடைய ராஜ்யம் வருவதாக உம்முடைய சித்தம் பரலோகத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலும் செய்யப்படுவதாக**" என்று, இன்னமும் கிறிஸ்தவர்கள் ஜெபித்து வாஞ்சிக்கிறதும், வரப்போகிறதுமான பூமிக்குரிய ராஜ்யத்தின் தலைநகராக எருசலேம் இருக்கும், ''**புறஜாதி**

யாருடைய நிறைவு உண்டாகும் வரைக்கும் இஸ்ரவேலரில் ஒருபங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும்'', இந்த பிரகாரம் இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள் (குருட்டாட்டத்திலிருந்து மீட்கப்படுவார்கள்- சகரியா 12 : 10) ''**மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து**'' (மேசியாவும் அவருடைய உடன் சுதந்தரரும் வெளி. 14 : 1; ஒபதியா 21) ''**அவபக்தியை யாக்கோபை விட்டு** (மாம்ச இஸ்ரவேலரிலிருந்து) **விலக்குவார்**'' என்று அப்போஸ்தலனாகிய பவுல் விளக்கிக் கூறுகிறார். (ரோம. 11 : 25, 26) மனுமக்களில் மீதியானவர்கள் கர்த்தரைத் தேடும்படி இப்போது மேசியா விழுந்து போன தாவீதின் கூடாரத்தைத் திரும்ப எடுப்பித்துக் கட்டிக் கொண்டிருக்கிறார். (ஆமோ. 9 : 11, 12; அப். 15 : 15-17) ஏனெனில் ஆபிரகாமின் சந்ததி பூமியின் வம்சங்களையெல்லாம் ஆசீர்வதிக்க வேண்டியதிருக்கிறது. (ஆதி. 22 : 18; சகரி. 8 : 13-23; 14 : 16, 17; ஏசா. 2 : 2-4).

**“சீயோன் குமாரத்தியே கெம்பீரித்துப்பாடு, இஸ்ரவேலரே ஆர்ப்பரியுங்கள். எருசலேம் குமாரத்தியே நீ முழு இருதயத்தோடும் மகிழ்ந்து களிகூரு. கர்த்தர் உன் ஆக்கினைகளை அகற்றி, உன் சத்துருக்களை விலக்கினார். இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார். இனி தீங்கைக் காணாதிருப்பாய். அந் நாளிலே எருசலேமைப் பார்த்து பயப்படாதே என்றும் சீயோனைப் பார்த்து, உன் கைகளைத் தளர விடாதே என்றும் சொல்லப்படும். உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார். அவர் வல்லமையுள்ளவர். அவர் இரட்சிப்பார்: அவர் உன் பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார்: அவர் உன் பேரில் கெம்பீரமாய்க் களிகூறுவார். உன் சபையின் மனுஷராயிருந்து பண்டிகை ஆசரிப்பில்லாமையால் உண்டான நிந்தையினிமித்தம் சஞ்சலப்பட்டவர்களை நான் ஏகமாய்க் கூட்டிக் கொள்வேன். இதோ அக்காலத்திலே உன்னைச் சிறுமைப்படுத்தின யாவரையும் தண்டிப்பேன்: நொண்டியானவனை இரட்சித்து, தள்ளுண்டவனைச் சேர்த்துக் கொள்ளுவேன். அவர்கள் வெட்கம் அனுபவித்த சகல தேசங்களிலும் அவர்களுக்குப் புகழ்ச்சியும் கீர்த்தியும் உண்டாகச் செய்வேன். அக்காலத்திலே உங்களை கூட்டிக்கொண்டு வருவேன்: அக்காலத்திலே உங்களைச் சேர்த்துக் கொள்ளுவேன். உங்கள் கண்காண நான் உங்கள் சிறையிருப்பைத் திருப்பும் போது பூமியிலுள்ள சகல ஜனங்களுக்குள்ளும் நான் உங்களைக் கீர்த்தியும் புகழ்ச்சியுமாக வைப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.”** (செப். 3 : 14-20). இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அநாதியாய் என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப் படத்தக்கவர். ஜனங்களெல்லாரும் ஆமென் அல்லேலூயா என்பார்களாக.

***

# ஆயிரம் வருஷமும் பூமியில் வரப்போகிற ராஜ்யமும்

***“அவர்கள் உயிர்த்துக் கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள்.”வெளி. 20 : 4***

இந்த விஷயம் எல்லாருடைய கவனத்தையும் கவருகிறதாயிருக்கிறது. இவாஞ்சலிக்கல் சபை மற்றும் ஃபண்டமன்டலிஸ்ட் சபை போன்ற பல்வேறு கிறிஸ்தவப் பிரிவுகளிலுள்ளவர்கள் சமீப காலத்தில் இவ்விஷயத்தில் அதிகமாக அக்கறை காட்டி வருகிறார்கள். மில்லேனியம் என்ற வார்த்தையானது லத்தீன் மொழியில் இருந்து வந்ததாகும். “மில்லே-” Mille என்ற லத்தீன் வார்த்தைக்கு ஆயிரம் என்றும் annus ஆனஸ் என்ற லத்தீன் வார்த்தைக்கு வருடம் என்றும் இரண்டும் சேர்த்து ஓர் பெயர்ச்சொல்லாக ஒரு விசேஷித்த ஆயிர வருட காலத்தைக் குறிக்க பயன்படுத்தப்பட்டது. அது இப்பூமியின்மேல் இயேசு கிறிஸ்துவும் அவருடைய உண்மையுள்ள சபையும் ஏற்படுத்தப் போகிற சந்தோஷமான, செழிப்பான ஆட்சியின் முதல் 1000 வருஷங்கள் ஆகும்.




அம்மில்லனிய லிஸ்ட்ஸ் என்று அழைக்கப்படுகிற கிறிஸ்தவர்களில் சிறுபான்மை வகுப்பார் கிறிஸ்துவும் உண்மையான சபையும் ஏற்படுத்தப் போகிற ஆயிர வருஷ ஆட்சியையும், இப்பூமியில் வரப்போகிற ராஜ்யத்தையும் ஒப்புக் கொள்ள மறுக்கிறார்கள். ஆயிரம் என்பது ஒரு அடையாளமான எண் மாத்திரமே என்றும், ராஜ்யத்தின் வாக்குத்தத்தங்கள் எல்லாம் இப்பூமியில் சபைக்குத் தங்களுடைய ஜீவிய காலத்துககு உரியது என்றும் சொல்லி பொருத்தமான வேத வாக்கியங்களுக்கு ஆன்மீகக் கருத்து அளிக்கிறார்கள். இந்த போதனை அமில்லினியலிஸம் என்று அழைக்கப்படுகிறது. ஆனால் சங். 90 : 4; 2 பேது. 3 : 8 வாக்கியங்களிலிருந்து (அப். 17 : 31; 2 தீமோ. 4 : 1 இவைகளோடு ஒப்பிட்டு பார்த்தால்) வெளி. 20 : 4, 6-ல் குறிப்பிட்டிருக்கிற 1000 வருஷமானது சொல்லர்த்தமாக 1000 வருஷங்களையே குறிக்கின்றன

என்பது தெளிவாகிறது. வெளிப்படுத்தின விசேஷத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற இரண்டு சாட்சிகள். ஏழு சபைகள், ஏழு தூதர்கள், ஏழு எக்காளங்கள், ஏழு கலசங்கள், 12 அப்போஸ்தலர், 12 அஸ்திபாரக் கற்கள். 12 வாசல்கள், 12 கோத்திரங்கள், 12 விலையுயர்ந்த கற்கள் முதலியனவும் மற்ற எண்களும்கூட அநேக இடங்களில் சொல்லர்த்த மாகவே உபயோகிக்கப்பட்டிருக்கின்றன.

## ஆயிரம் வருஷத்துக்கு முன்பு கிறிஸ்து வருகிறார் என்ற கொள்கையும் ஆயிரம் வருஷத்துககுப் பின்பு கிறிஸ்து வருகிறார் என்ற கொள்கையும்

ஆயிரம் வருஷத்திலும், பூமியின் மீது ஸ்தாபிக்கப்படபோகிற ஒரு தேவனுடைய ராஜ்யத்திலும் விசுவாசம் வைத்திருக்கும் கிறிஸ்தவ விசுவாசிகளின் மத்தியில் இரண்டு வித்தியாசமான கருத்துகள் ஆதரித்துப் பேசப்படுகின்றன. **(1)** *ஆயிரம் வருஷத்துக்கு முன்பு கிறிஸ்து வருகிறார் என்ற கொள்கை:* இந்த கருத்தின்படி ஆயிர வருஷம் கிறிஸ்து தனது உண்மையுள்ள சபையோடு ஆளவும், அந்நாட்களில் உலகத்தாரை மனந்திரும்பச் செய்யவும், ஆயிரம் வருஷத்துக்கு முன்பு அவர் வருகிறார் என்ற போதனையாகும். **(2)** *ஆயிரம் வருஷத்துக்குப் பின்பு கிறிஸ்து வருகிறார் என்ற கொள்கை :* இந்தக் கருத்தின்படி, மனந்திரும்பிய உலகத்தாரை எடுத்துக் கொள்ளவும், எல்லா உலகக் காரியங்களுக்கும் ஒரு முடிவு கட்டவும் கிறிஸ்து ஆயிரம் வருஷத்துக்குப் பின்பு வருகிறார் என்ற போதனையாகும்.

## சுவிசேஷ யுகத்தில் உலகத்தாரின் மனந்திரும்புதல் இல்லை

ஆயிர வருஷத்துக்குப் பின்பு கிறிஸ்து வருகிறார் என்ற கொள்கை உண்மையல்ல என்று வேதாகமம் தெளிவாகக் காண்பிக்கிறது. ஏனென்றால், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் அவர் மனந்திரும்பிய உலகை அல்ல, ஆனால் மனந்திரும்பாத உலகையே சந்திக்கிறார். அப்பொழுது ஜாதிகள் கோபமாயும் தேவனை எதிர்த்து கலகம் செய்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். ஆகையால் தேவன் அவர்கள் மேல் தன் உக்கிரத்தை ஊற்றுகிறார். (சங். 2 : 1-12; வெளி. 11 : 18; 19 : 11-21). அக்கிரமமும் அநியாயமும் நிறைந்திருப்பதினால், கடைசி காலங்கள் முக்கியமாக ஆபத்தானதாக இருக்கும் என்றும் (2 தீமோ. 3 : 13), அநேகர் விசுவாசத்தைவிட்டு விலகிப் போவார்கள் என்றும் (1 தீமோ. 4 : 1), பூமியிலே உண்மையான விசுவாசத்தைக் காண்பது அரிதாயிருக்கும் என்றும் (லூக். 18 : 8), நல்லோரும் தீயோரும் யுகத்தின் முடிவு வரை ஒன்றாக வளர்ந்து, பிந்தினவர்கள் அதிக எண்ணிக்கை யோடு இருப்பார்கள் என்றும் (மத். 13 : 30, 39), கள்ள போதகர்கள் கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர் களையும் வஞ்சிக்கத்தக்கதாக அவ்வளவு தந்திரமிக்கவர்க ளாயிருப்பார்கள் என்றும் (மத். 24 : 24), அந்நாட்களில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து பரிகாசமான பேச்சு மிகுதியாய் இருக்கும் என்றும் (2 பேது. 3 : 3, 4), பணக்காரர் சுகபோகத்தில் உழன்று செல்வத்திற்காகப் பேராசை பிடித்து ஏழைகளை கொடுமைப்படுத்திக் கொண்டிருப்பார்கள் என்றும் (யாக். 5 : 3-6), வேத வாக்கியங்கள் நமக்குக் கூறுகின்றன. கிட்டத்தட்ட நூறு வருஷங்களுக்கு முன்பு, லண்டன் மிஷனரி சொஸை யிட்டியுடைய அறிக்கையின்படி உலகத்தின் ஜனத்தொகை கிட்டத்தட்ட 150 கோடி, இவர்களில் கிட்டத்தட்ட 50 கோடி பேர் கிறிஸ்தவர்கள், குறைந்தப்பட்சம் அதாவது மூன்றில் ஒரு ஆள் (பெயரளவிலாவது) கிறிஸ்தவராக இருந்தனர். அதற்குப் பிறகு, பல்வேறு மிஷன்களிலுள்ள மிஷனரிமாரும் சுவிசேஷகர்களும் மிகவும் அதிகமாக கொடுமைகளையும், பாடுகளையும், மரணத்தையும்கூட சகித்து, உலகமக்களை கிறிஸ்தவ மதத்துக்கு மாற்ற ஊக்கத்துடனும் சுயநலம் கருதாமலும் முயற்சிகள் எடுத்தார்கள். உலக மக்கள் எல்லோரும் கிறிஸ்தவ மதத்துக்கு மாற்றப்படுவதை அடைந்துவிடுவது நெருங்கிவிட்டதாகவே அநேகருக்குத் தோன்றினது. ஒரு வகுப்பார், “எங்களுக்கு 30 கோடி ரூபாய் கொடுங்கள், நாங்கள் உலகமக்கள் அத்தனை பேரையும் கிறிஸ்தவர்களாக்கி விடுவோம்” என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டே இருந்தார்கள். ஆனால் என்ன நேரிட்டது? எல்லா மிஷனரிமாரும், சுவிசேஷகரும் கடந்த நூற்றாண்டில் மிகவும் முயன்றிருந்தாலும், சமீபத்தில் வெளியிடப் பட்டிருக்கிற புள்ளி விவரப்படி இன்றைய உலக ஜனத் தொகை கிட்டத்தட்ட 700 கோடியாகும். ஆனால் ஒப்பிடுகையில் வெறும் நூறு கோடி பேரே கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள் என்றும் குறைந்த பட்சம் பெயரளவிலாவது நான்கு பேரில் ஒருவரே கிறிஸ்தவராக இருக்கிறார் என்றும் தெரிய வருகிறது. இவர்களில் உண்மையான கிறிஸ்தவர்கள் ஒரு நூற்றாண்டுக்கு முன்பு இருந்ததை விட மிகவும் குறைவானவர்களே. முன் சொல்லப்பட்டதற்கேற்ப, ஆயிரம் வருஷத்துக்குப் பின்பு கிறிஸ்து வருகிறார் என்ற கொள் கையையுடையவர்கள் போதிக்கிறபடி, கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பு அதாவது சுவிசேஷ யுகத்தில் உலக மக்கள் அனைவரும் கிறிஸ்தவர்களாக மாற்றப் படுவதை எதிர்பார்க்க முடியாது என்றும், அப்படி செய்வது சுவிசேஷ யுகம் அல்லது சபையின் யுகத்தின் தேவனுடைய நோக்கமும் ஏற்பாடும் அல்ல என்றும் வேத வாக்கியங்கள் நியாயம், உண்மை, இவைகளில் வாயிலாக சிந்திக்கும் ஜனங்களுக்கு அதிகமதிகமாகத் தெளிவாகிறது. மற்றபடி, அது நிறைவேறித் தீருவதைப் பார்த்திருப்போம். ஏனென் றால், பிசாசு, தீயமனிதர், இவர்களுடைய எதிர்ப்பு இருந் தாலும், தேவன் தன்னுடைய நோக்கத்தை எப்பொழுதும் நிறைவேற்றியே முடிக்கிறார் (ஏசா. 46 : 9-11; 55 : 8-11). ஆயிரம் வருஷ யுகத்துக்கு முன்னுள்ள தேவனுடைய நோக்கமும் ஏற்பாடும் “***சகல கோத்திரங்களிலும், பாஷைக் காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து***” சிலரைத் தேர்ந்தெடுப்பதும், தெரிந்து கொள்ளுவதும், சீஷராக்கு வதுமே என்று அதிகமதிகமாக சிந்திக்கும் பிரசங்கிகளும் மற்றவர்களும் ஒப்புக்கொண்டு வருகிறார்கள். (மத். 28 : 19; அப். 15 : 14; வெளி. 5 : 9). இந்தத் தெரிந்து கொள்ளப் பட்டவர்களே உலகத்தாரை ஆசீர்வதிக்கப் போகிறவர்களும், தேவனிடத்தில் அவர்களை மனந்திரும்பச் செய்ய


போகிறவர்களுமான ஆயிரம் வருஷத்துக்கு முந்திய சந்ததியும், ஆபிரகாமின் பிள்ளைகளுமாவார்கள். (ஆதி. 12 : 3; 22 : 16-18; கலா. 3 : 8, 16, 29). உண்மையுள்ள கிறிஸ்தவர்களாயிருப்பதற்குக் கஷ்டமாயிருக்கிற "இப்பொழு திருக்கிற பொல்லாத உலகத்தில்" பூமியில் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்பு, (1) பாவமன்னிப்பு, (2) இயேசுவே இரட்சகர் என்பதில் விசுவாசம், (3) தேவனுக்குப் பிரதிஷ்டை, ஆகிய இந்த மூன்று படிகளின் வழியாக தேவனிடத்தில் சேர்ந்து, அவருக்கும் அவருடைய காரியங்களுக்கும் தங்கள் பிரதிஷ்டையில் உண்மையுள்ள வர்களாயிருக்கிற எல்லாரும் ஆயிரம் வருஷ யுகத்துக்கு முந்திய ஆபிரகாமின் வித்திற்குள் சேர்க்கப்பட்டிருக் கிறார்கள். (கலா. 1 : 4; 2 தீமோ. 3 : 12).

## ஆயிரம் வருஷ யுகத்தின் மேலுள்ள ஆர்வம் அதிகரிக்கிறது

சமீப வருஷங்களில் 1000 வருஷத்துக்கு முன்பு கிறிஸ்து வருகிறார் என்கிற கொள்கையிலும், வரப்போகிற கிறிஸ்து, அவருடைய சபை, இவர்களின் ஆயிரம் வருஷ யுக ஆட்சியிலும் அக்கறையும் நம்பிக்கையும் அதிகரித்து வரும்பொழுது, ஆயிரம் வருஷத்துக்குப் பின்பு கிறிஸ்து வருகிறார் என்கிற கொள்கை மிகவும் குறைந்து கொண்டு வருகிறது. இதற்குக் காரணம், உலகின் நிலைமை அதிக அளவிற்குக் கெட்டுப்போய்க்கொண்டிருப்பதும், இந்த யுகத்தில் உலகத்தை தேவனிடத்தில் மனந்திரும்பச் செய்வது எதிர்பார்க்க முடியாததாயிருப்பதுமே. வந்து கொண்டிருக்கிற ஆயிர வருஷ யுகத்தைப் பற்றியும் இப்பூமியில் ஸ்தாபிக்கப்படும் தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றியும், பொதுவாக மறுக்கப்பட்ட பொழுதும், அவைகளை ஆதரிக் காமலிருந்தபோதும், அல்லது அவைகளுக்கு முக்கியத் துவம் கொடுக்காதிருந்த போதும், அநேக வருஷங்களாக நம்முடைய பத்திரிகைகளும், புஸ்தகங்களும், கைப் பிரதிகளும் இவைகளை போதித்தும் இவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தும் வந்திருக்கின்றன. இப்பொழுது மற்றவர்கள் இவைகளை மிகவும் தெளிவாக புரிந்து கொள்ளாமலிருந்தாலும் காலத்துக்கேற்ற சத்தியத்தின் அறிவில் அதிகம் முன்னேறாமலிருந்தாலும், இந்த காரியங்களை போதிப்பதையும் இவைகளுக்கு முக்கியத் துவம் கொடுப்பதையும் காணும்போது, எங்களுக்குத் திருப்தியாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறது. பில்லி கிரஹாம், M.R. டீஹான், டாக்டர் எஸ்டெப், ஹால் லிண்ட்சே, சாலேம் கிர்பான் ஜான்ஹாக்கி, ஜான் ஸ்டான்லி போன்ற அநேக புகழ் பெற்ற சுவிசேஷகர்களும், போதகர்களும் எழுத்தாளர்களும் ஆயிரம் வருஷ யுகத்தையும், இப் பூமியில் தேவனுடைய ராஜ்ய ஸ்தாபிதம் உடனடியாக நிகழக் கூடியதாகயிருக்கிறதையும் போதித்தும், அவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டும் வருகிறார்கள். அக்காலத்தில், பூரணமான அரசாங்கத்தையும், பூரணப் படுத்தப்பட்டு, முழு பூமியும் தன் பலனைக் கொடுக்கிற ஒரு ஏதேனின் நிலைமையையும் கொண்ட இவ்வுலகம் செழிப்படைவதையும், அது தேவனைப் பற்றியும் அவருடைய ஏற்பாட்டையும் குறித்த அறிவினால் நிறைந் திருப்பதையும், சமாதானம், பாதுகாப்பு, சமத்துவம் நீடித்திருப்பதையும் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இது ஒரு முக்கியமான போக்காகவும், தேவனுடைய ராஜ்யம் கூடிய சீக்கிரத்தில் ஸ்தாபிக்கப்படும் காலத்தில் நாம் வசித்துக் கொண்டிருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்டுகிற தாயுமிருக் கிறது. இன்னமும் அதிகம்பேர் இந்தச் சத்தியத்தின் பிரகாசத்தைப் பெற்று இந்த காரியங்களை போதிப்பார்கள் என்றும் இவைகளுக்கு முக்கியத்துவமும் கொடுப்பார்கள் என்றும் நாங்கள் நம்புகிறோம். இந்த முதல் முயற்சிக்குக் கூடுதலாக எல்லாரும் ஆயிரம் வருஷ யுகத்திலுள்ள தேவனுடைய நோக்கத்தையும் ஏற்பாட்டையும் குறித்த அறிவை அடைய மேலும் முயற்சிகள் எடுப்பார்கள் என்றும், இவைகள் எல்லாவற்றையும் போதிக்கவும் இவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவும்கூட ஆரம்பிப்பார்கள் என்றும் நாங்கள் நம்புகிறோம்.

## முதல்படி – 1000 வருஷ பூமிக்குரிய ராஜ்யம்

இயேசுவும் அவருடைய உண்மையான சபையும் சேர்ந்து இப்பூமியின் மீது சொல்லர்த்தமாகவே 1000 வருஷங்கள் ஆட்சி செய்வார்கள் என்று வேதவாக்கியங்கள் தெளிவாகப் போதிக்கின்றன என்பதை நாம் முதலில் ஒப்புக் கொள்ள வேண்டும். (வெளி. 5 : 9, 10; 20 : 4, 6; 2 பேது. 3 : 8; மத். 19 : 28; லூக். 12 : 32; 22 : 29, 30). இது, உலகம் முழுவதும் பரவப்போகிற சமாதானம், செழிப்பு, தேவனைப் பற்றிய அறிவு, பாதுகாப்பு, சமத்துவம், பூரண சுற்றுப்புறம், பூரண சூழ்நிலை, பூரண அரசாங்கம், இவைகளைக் கொண்ட ராஜ்யம் விரைவில் ஸ்தாபிதமாகப் போகிற ஒரு காலமாயிருக்கிறது. அந்த காலத்தில் இப்பூமியிலிருந்து சாபம் நீக்கிப்போடப்பட்டு, இப்பூமி ஏதேன் தோட்டத்தைப் போலாக்கப்படும். (ஏசா. 35 : 1, 2; 61 : 4; எசே. 36 : 35). சாத்தான் முற்றிலுமாகக் கட்டப்பட்டு அடக்கப்படுவான், இவ்விதமாக, ஜனங்களை இனி சோதிக்கக் கூடாதவனுமாவான், கிறிஸ்து ஜனங்களை நீதிக்குட்படுத்தி முழு அதிகாரத்தையும் செலுத்துவார். (வெளி. 20 : 1-3; சங். 72 : 7, 8). தப்பறைகளும் அறியாமையும் இவ்வுலகிலிருந்து நீக்கப்படும். சத்தியம் எவ்விடத்திலும் ஆளும் (ஏசா. 25 : 7-9; 11 : 9). பாவத்தின் அரசுரிமை பறிக்கப்பட்டு நீதி சிங்காசனத்தில் அமர்த்தப் படும். (சங். 107 : 41, 42; ஏசா. 62 : 12). மனுக்குலம் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, எவ்வழியிலும் முழு சுதந்திரத்தையும் அடைவதற்குரிய சந்தர்ப்பம் அதற்குக் கொடுக்கப்படும் (ரோம. 8 : 21). மனுஷருடைய துயரம் அகன்று போய், உலகலாவிய சந்தோஷம் குடிகொள்ளும் (ஏசா. 35 : 10). யுத்தம் நின்றுபோய் எவ்விடத்திலும் சமாதானம் ஆளும் (ஏசா. 2 : 4; 9 : 7). நீதிமான்கள் இனி ஒருபொழுதும் துன்பப்படமாட்டார்கள். ஆனால் தங்களுடைய நீதியினிமித்தம் எவ்விடத்திலும் உயர்த்தப் படுவார்கள். (ஏசா. 25 : 8; சங். 72 : 7). துன்மார்க்கர் இனி ஒருபொழுதும் உயர்த்தப்படமாட்டார்கள். ஆனால் அவர்கள் இகழ்ச்சிக்கு ஆளாகி இழிவுப்படுத்தப்பட்டு, சீர்திருத்து வதற்காக அடிக்கப்படுவார்கள். திருந்தாத துன்மார்க்கர் நிர்மூலமாக்கப்படுவார்கள். (மல். 3 : 15; ஏசா. 26 : 10; சங். 37 : 35, 36). பொய்யான மதங்கள் இனி இராமல்




போகும்; எவ்விடத்திலும் அந்த ஒரே உண்மையான மார்க்கம் அங்கீகரிக்கப்பட்டதாயிருக்கும். (ஏசா. 65 : 15; 60 : 14, 15; செப். 3 : 9). கொடுங்கோலாட்சி செய்யும் அரசாங்கங்கள் இனி இராமல் போகும். பேணி போஷிக்கும் கிறிஸ்துவின் அரசாங்கம் எல்லாரையும் ஆசீர்வதித்து எல்லாருக்கும் உதவி செய்யும். (ஏசா. 2 : 2-4; 60 : 12; சங். 72 : 12-14). ஜனங்கள் இனி விருதாவாய் உழைத்து துன்பமுண்டாகும் காரியங்களை உண்டுபண்ணமாட்டார்கள். ஆனால் எல்லாரும் தாங்கள் மேற்கொள்ளும் காரியங்களில் அபிவிருத்தியடைவார்கள். (ஏசா. 65 : 23; 60 : 17). பிறகு சுரண்டலும் வறுமையும் இருக்காது. ஆனால் ஒவ்வொரு வரும் தொந்தரவு கொடுப்பாரின்றி தன்னுடைய சொந்த உடைமைகளை அதாவது கைகளின் கிரியைகளை அனுபவிப்பார்கள். (ஏசா. 65 : 22; மீகா 4 : 4). அநேகர் இதன் பேரிலுள்ள சத்தியத்தை பற்றிக் கொண்டு இப்பொழுது போதிக்கிறார்கள் என்பதைக் காணும்போது நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். ஆனால் மேலுமுள்ள படிகளையும் எடுக்க வேண்டியது அவர்களுக்கு அவசியமாயிருக்கிறது.

## இரண்டாம் படி – மனுஷர் பழைய பூரண நிலைக்குத் திரும்பக் கொண்டு வரப்படுவார்கள்

மேலும், கிறிஸ்துவும் அவருடைய சபையும் ஆளுகிற ஆயிரம் ஆண்டு மத்தியஸ்த ராஜ்யத்தில் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு தங்களை தேவனுக்கு அர்ப்பணித்து, அதாவது பிரதிஷ்டை செய்து கீழ்ப்படிதலுடன் தங்களுடைய பிரதிஷ்டையின் பொருத்தனைகளை நிறை வேற்றுகிற எல்லா ஜனங்களும் படிப்படியாக மானிட பூரணத்துவத்துக்கு உயர்த்தப்பட்டு இழந்து போனவை களைத் திரும்பப் பெறுவார்கள். "**உலகத்தோற்ற முதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகள் எல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகளெல்லாம் திரும்பக் கொடுக்கப்படும் காலங்கள்** (Times of Restitution) **வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக் கொள்ள வேண்டும்.** (பரலோகத்தில் கிறிஸ்து நிறுத்திவைக்கப்பட வேண்டும்)" என்று அப். 3 : 19-21-ல் வாசிக்கிறோம். (அதாவது இழந்து போனவைகள் திரும்பக் கொடுக்கப்படும் காலங்கள் வருமளவும் அவருடைய இரண்டாம் வருகை ஆரம்பமாகாது). இழந்துபோனவைகள் திரும்பக் கொடுக்கப்படுவது என்பது முதலாவதான சீருக்குத் திரும்புவதைக் குறிக்கும். தகப்பனாகிய ஆதாமிலும் தாயாகிய ஏவாளிலும் விளக்கப்பட்டிருந்த தேவனுடைய சாயலும் ரூபமுமே மனித குடும்பத்தின் முதலாவதான சீராகும். தேவனுடைய சாயல் என்பதின் மூலம் ஜீவியின் பூரணத்துவத்தை, அதாவது, தேவன், "**மிகவும் நன்றாயிருக் கிறது**" என்று சொன்ன பொழுதுள்ள நிலைமையை குறிக்கிறதென்றும் நாம் புரிகிறோம். (ஆதி. 1 : 26, 27, 31; எபி. 2 : 6-8) தேவனுடைய ரூபம் என்பதின் மூலம் தேவன் அண்டசராசரத்தையும் ஆளுவது போல, அவருக்கொப்பாக இந்த பூமியின் மீது இருந்த மனிதனின் ஆளுகை குறிப்பிடப் படுகிறது என்று நாங்கள் புரிந்து கொள்கிறோம். (ஆதி. 1 : 26, 28, 29; மத். 25 : 34). தேவனுடைய சாயல் என்பது சரீரம், மனம், சன்மார்க்கம் மற்றும் மதம் சம்பந்தமான திறமைகளிலுள்ள பூரணத்துவத்தைக் குறிக்கிறது. இந்த பூரணத்துவத்துக்கு, வீழ்ச்சிக்கு முன் இருந்த ஆதாமும் ஏவாளும் உதாரணமாயிருக்கிறார்கள். தேவனுடைய ரூபம் என்பது பூரணமான ராஜாக்களின் பொறுப்பில் உள்ள ஒரு பூரண பூமியைக் குறிக்கிறது. ஆனால், தேவனுடைய சாயலையும் ரூபத்தையும், ஆதாம் இழந்து போனான். அதாவது ஆதியிலிருந்த பூரணத்து வத்தையும் ஆளுகையையும் இழந்து போனான் என்று பரி. பவுல் தெரிவிக்கிறார். (எபி. 2 : 8). தேவனுடைய சாயல் இருந்த இடத்தில் சரீரம், மனம், நீதி மற்றும் மத சம்பந்தமான சீரழிவு ஏற்பட்டிருக்கிறது. தேவனுடைய ரூபம் இருந்த இடத்தில், சபிக்கப்பட்ட பூமியின் கொடுங்கோன்மையானது மனிதன் மீது வந்தது; அது அவனுடைய ஜீவனைப் போக்கும்வரை மிகவும் அடக்கி வருத்துகிறது. (ஆதி. 3 : 17, 19). தகப்பனாகிய ஆதாம் செய்த பாவத்தின் காரணமாக இவைகள் எல்லாம் மனிதன்மேல் வந்திருக் கிறதாக வேத வாக்கியங்கள் நிச்சயப்படுத்துகின்றன. (ஆதி. 3 : 1-24; ரோம. 5 : 12-21; 1 கொரி. 15 : 21, 22). இப்பொழுதுள்ள மனிதக் குடும்பம் உடைந்த மரக்கலம் போலிருக்கிறது. இந்த துக்ககரமான நம்முடைய மனுக்குலத்தின் அழிந்த நிலைமை நம்முடைய சிருஷ்டிகரில் மிகுந்த இரக்கத்தை ஏவினது. தனது உக்கிர தண்டனையின் (மரணம், எரிநரகத்தில் நித்தியகாலமாக வதைப்பதல்ல) மத்தியில் அதாவது மரண தண்டனை அடைந்து விழுந்துபோன மனுஷனுக்காகத் தனக்கிருந்த இரக்கத்தை



நினைவுகூர்ந்தார். அதன்பலனாக மனிதனை மரணத்தினின்று மீட்கும் பொருளாக (ஈடு பலியாக) தன்னுடைய நேச குமாரனை இந்த உலகிற்கு அனுப்பினார். (1 தீமோ. 2 : 4-6; மத். 20 : 28; யோவா. 3 : 17; ரோம. 5 : 7, 8, 16-19). கிறிஸ்துவின் முதலாம் வருகையில் மீட்கும் பொருள் (ஈடுபலி) சமர்ப்பிக்கப்பட்டது; அதுபோல, அவருடைய இரண்டாம் வருகையில் அந்த மீட்கும் பொருளை (ஈடுபலியை) தெரிந்துகொள்ளப்படாதவர்கள் இழந்து போனதைத் திரும்பப் பெற உபயோகிப்பார். ஆதாமின் சாபத்தால் பாரம்பரியமாய் வந்த இழக்கப்பட்ட தேவ சாயல், ரூபம் இவைகளின் அழிவிலிருந்து முதலாவதான முந்தின சீருக்குத் திரும்புவதே இழந்து போனதைத் திரும்பக் கொடுப்பதாகும்; (அவருடைய இரண்டு வருகைக்கும் இடையே உள்ள இடைவேளையான சுவிசேஷ யுகம் தன்னுடைய மணவாட்டியை தெரிந்து கொள்வதற்காகவும், தனது மணவாட்டியாகிய சபைக்கு மாத்திரமே ஆசீர்வாதங்களை கொடுப்பதற்கும் இருந்திருக்கிறது). இவ்விதமாக, பாவமில்லாத "**மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவின்**" (1 தீமோ. 2 : 3-6) மரணம் ஆதாமின் பாவத்தின் பலனாகக் கிடைத்த ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பிலிருந்து எல்லாரும் விடுவிக்கப்படுவதற்காக போதுமான புண்ணியத்தை அவர்களுக்குக் கொடுத்து, அதன் விளைவுகளிலிருந்து முழு விடுதலையடைய ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுக்க உத்தரவாதமும் அளிக்கிறது, அதாவது ஆதாமின் முதலாவதான பூரணத்துவத்தைத் திரும்ப கொடுப்பதாகும். மற்ற காரியங்களுக்கிடையே, தேவனுடைய மகிமையான சாயலை மனுஷருக்குத் திரும்பவும் கொடுக்கவும், மனுக்குலத்துக்கு பூரண சரீரத்தையும், மனதையும் இருதயத்தையும் கொடுக்கவும், அதிசயமான தேவனுடைய ரூபத்தையும் அவர்களுக்குத் திரும்பக் கொடுக்கவும் அதாவது ஏதேன் தோட்டத்தைப் போலாக்கப்படுகிற பூமியின் மீது பூரண ஆளுகையை மனுக்குலத்துக்குக் கொடுக்கவுமே கிறிஸ்து இப்பூமிக்குத் திரும்ப வருகிறார். கிறிஸ்துவின் ஆயிரம் வருஷ ராஜ்யத்தின் நியாயமான தேவைகளை ஏற்றுக்கொண்டு அவைகளுக்குக் கீழ்ப்படிகிற யாவரும் இந்த ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள். இவ்வாறாக ஏதேன் தோட்டத்தின் நிலைமைகள், பூரண சூழ்நிலை ஆகிய இவைகளை பூமியில் ஏற்படுத்துவது மட்டுமல்லாமல், விருப்பமுள்ள, கீழ்ப்படிகிற மனுஷரை, ஆதாம் பூரணமாயிருந்தது போல பூரணப்படுத்துவதுமே, இழந்து போனவைகளை திரும்பக் கொடுத்தல் அல்லது முந்தின சீருக்குத் திரும்பக் கொண்டுவருதல் என்பதாகும். மனுஷர், பொதுவாக, இந்த பூமியின் மீது வாழ்வதற்காகவே சிருஷ்டிக்கப்பட்டனர், பரலோகத்தில் வாழ்வதற்கு அல்ல. ஆதாமும் ஏவாளும் வீசிக்கொண்டிருக்கிற சுடரொளி பட்டயம் கொண்டு தேவதூதர்களால் ஏதேன் தோட்டத்திலிருந்து விரட்டப்பட்டு அதற்கு வெளியே வைக்கப்பட்டிருந்தார்கள். இல்லாவிடில் ஜீவ விருட்சங்களின் கனிகளை அவர்கள் தொடர்ந்து புசித்து அதன் பலனாக பூரணமனுஷராக பூமியின் மீது சதாகாலமும் வசித்திருப்பார்கள்; மரித்திருக்க மாட்டார்கள். (ஆதி. 3 : 22-24). மனுஷருக்காகவுள்ள பொதுவான விதிக்கு தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் மாத்திரமே விதிவிலக்காவார்கள், இவர்கள் நித்திய காலமாக




பரலோகத்தில் வாழ்வார்கள். அதுவே அவர்களுடைய நித்திய இருப்பிடமாகும். (எபி. 10 : 34; 1 பேது. 1 : 4). மனுஷரில் மற்ற எல்லாரும் இழந்து போனவைகள் திரும்பக் கொடுக்கப்படும் இரட்சிப்பில் பங்கு கொண்டு இப்பூமியில் வாழ்வார்கள். இவ்வாறாக, "**இழந்து போனவைகளை திரும்பக் கொடுத்தல்**" என்கிற இவ்விஷயத்தை கற்றுக் கொள்ளுதலும் கூட தேவனுடைய ஏற்பாட்டை புரிந்து கொள்ளுவதிலுள்ள முக்கியமான பிடியாகும். அநேகர் இதை ஏற்றுக் கொண்டு மற்றவர்களுக்கு இதைப் போதிக்கிறார்கள் என்று அறிந்து நாங்கள் சந்தோஷப்படுகிறோம். ஆனாலும் இன்னும் இரண்டு படிகள் உள்ளன.

## மூன்றாவது படி–உயிரோடிருக்கிறவர்களும் மரித்தவர்களும் பலனடைதல்

தேவனுடைய வழிகள் சமமானவைகளும் பாரபட்சமில்லாதவைகளாய் இருக்கிறதினாலும் (எசே. 18 : 29-32) மரணம் தானே குணத்தை நிச்சயக்கிறதில்லை என்றிருப்பதாலும் உயிரோடிருக்கிறவர்கள் ஆயிரம் வருஷ ஆட்சியில் பூமிக்குரிய இரட்சிப்பில் பங்கடைய ஒரு சந்தர்ப்பத்தைப் பெறுவார்கள் என்பதும் அல்லாமல், இந்த ஜீவியத்தில் இரட்சிப்புக்காகவுள்ள சந்தர்ப்பத்தை பெறாமல் மரித்தவர்களும்கூட, அதாவது எபி. 6 : 4, 5 வாக்கியங்களில் சொல்லப்பட்டிருக்கிற ஐந்து ஆசீர்வாதங்களை பெற்றிராதவர்களும் கூட இச்சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொள்வார்கள். "**நம்முடைய இரட்சகராகிய தேவன் எல்லா மனுஷரும்** (ஆதாமுக்குக் கிடைத்த ஆக்கினைக்கு எதுவான தீர்ப்பிலிருந்து) **இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை** (துல்லியமான அறிவை) **அடையவும் சித்தமுள்ளவராயிருக்கிறார்.**" (1 தீமோ. 2 : 3-6). இந்த அறிவை பெறாமல் மரணமடைந்திருக்கிற மரித்தவர்கள் இதைப் பெற வேண்டுமானால், மரண நிலைமையிலிருந்து எழுப்பப்பட வேண்டும். தேவன் அவர்களை எழுப்புவார். மனுக்குலத்தில் தெரிந்து கொள்ளப்படாத ஒவ்வொருவரும் இந்தச் சத்தியத்தின் அறிவைப் பெற்றபிறகு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளவும், தேவனுக்குப் பிரதிஷ்டை செய்யவும், அவருக்குக் கீழ்ப்படிந்திருக்கவும் சந்தர்ப்பத்தைப் பெறுவார்கள். இந்த நல்ல மார்க்கத்தில் உண்மையுள்ளவர்களாயிருப்பவர்கள் இப்பூமியில் நித்திய ஜீவனைப் பெறுவார்கள். மற்ற எல்லாரும் ஜீவனை இழந்து நாசமடைவார்கள்; அதாவது ஜனங்

களிலிருந்து நிர்மூலமாவார்கள். (சங். 145 : 20; அப். 3 : 23; வெளி. 20 : 12-15; 21 : 8). தேவன் "**எல்லா மனுஷருக்கும் விசேஷமாக விசுவாசிகளுக்கும் இரட்சகராய் இருக்கிறார்**" (கிறிஸ்து மூலமாக ஆதாமின் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பிலிருந்து நீங்கலாக்கி நித்திய ஜீவனை அருளுகிறார். ரட்சிக்கப்படாமல் மரித்தவர்களுக்கு ஏதேனும் நம்பிக்கை உண்டா? என்ற நமது சிறு புத்தகத்தில், இந்த ஜீவியத்தில் சந்தர்ப்பத்தைப் பெறாதவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப்படும் என்று நிரூபிக்கும் வேத வாக்கியங்கள் அநேகம் கொடுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக சங். 22 : 27, 29; மத். 12 : 31, 32; யோவா. 1 : 9; 12 : 32; லூக். 2 : 10-14; பிலி. 2 : 6-11; எசே. 16 : 44-63. மனுக்குலத்துக்காகவுள்ள தேவனுடைய இரட்சிப்பின் ஏற்பாட்டை உண்மையாகவே புரிந்து கொள்ள வேண்டுமானால், தெரிந்து கொள்ளப்படாத மரித்தவர்களுக்கும், தெரிந்து கொள்ளப்படாத உயிரோடிருப்பவர்களுக்கும், இழந்துபோனவைகளை திரும்பக் கொடுத்தல் அல்லது முந்தின சீருக்கு கொண்டுவருதல் என்றுள்ள வேதாகம சத்தியத்தை கிரகித்துக் கொள்வது மிகவும் முக்கியமான தொன்றாகும்.

## நான்காவது படி – இப்பூமியின் மேல் நித்திய ராஜ்யம்

இழந்து போனவைகளைத் திரும்பப்பெற்று இப்பூமியில் வாழும் மனுக்குலத்தை ஆளுகிற தேவனுடைய ராஜ்யம், 1000 வருஷம் நிறைவேறும்வரைக்குமட்டுமல்ல, ஆனால் அது நித்தியமாய் தொடர்ந்திருக்கும். இது அநேக வேத வாக்கியங்கள் மூலமாகத் தெளிவாக காண்பிக்கப் பட்டிருக்கிறது. தானி. 2 : 35, 44; 7 : 13, 14, 18 ("என்றென்றைக்குமுள்ள சதாகாலங்கள்" என்றிருப்பதை கவனிக்க வேண்டும்), 21, 27 (பரலோகத்திலுள்ள ராஜ்யம் அல்ல, ஆனால் "**வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்யங்கள்**" என்றிருப்பதை கவனிக்க வேண்டும்; இதை மத். 6 : 10- வுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்). வெளி. 11 : 15; 21 : 1-4. "**இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சம்**" (கலா. 1 : 4) அதன் "**வானங்களோடும்**" (ஆளும் அதிகாரங்களும், அதாவது சாத்தானும் அவனுடைய கையாட்களும், 2 கொரி. 4 : 4, அதன் பூமியோடும் (இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கிற மனுஷ சமுதாயம்) இப்பொழுது எரிந்து கொண்டிருக்கிற மகா அழிவின் "**அக்கினியில்**" அழிக்கப்படும். (2 பேது. 3 : 7-13). ஆனால் பூமியாகிய இந்த கிரகம் மனுஷர் வாசம் செய்வதற்காக சிருஷ்டிக்கப் பட்டது. ஆகவே, அது எப்பொழுதும் நிலைத்திருக்கும் (ஏசா. 45 : 18; சங். 115 : 16; பிரச. 1 : 4). சமாதானம், பாதுகாப்பு, சந்தோஷம் ஆகியவற் றோடுகூட இழந்துபோனவைகளை திரும்பப் பெற்று, பூரணமாக்கப்பட்ட, இரட்சிக்கப்பட்ட மனுஷரைக் கொண்ட புதிய பூமி, அதாவது புதிய சமுதாய ஒழுங்கு எப்பொழுதும் இருக்கும். இதோடு சம்பந்தப்பட்ட புதிய வானங்களும் (தேவனுடைய தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் அடங்கிய புதிய ஆவிக்குரிய ஆளும் அதிகாரங்கள்) எப்பொழுதும் இருக்கும். (ஏசா. 65 : 17; 66 : 22; 2 பேது. 3 : 13). "**வானத்திலும் பூமியிலும் பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும், சமுத்திரத்திலுள்ளவைகளும், அவற்றுளடங்கிய வஸ்துக்கள் யாவும் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும், ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக**" என்று வாழ்த்துவார்கள். (வெளி. 5 : 13). வரவிருக்கும் இந்த அற்புதமான சம்பவத்தைக் குறித்து நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த அற்புதமான வேதாகம சத்தியங்களை ஆழ்ந்து படிக்கவும், ஏற்றுக் கொள்ளவும், மற்றவர்களுக்குப் போதிக்கவும் நாங்கள் எல்லோரையும் உற்சாகப் படுத்துகிறோம். மேலும் விபரங்களுக்கு யுகங்களைப் பற்றிய தேவ ஏற்பாடு, ஆயிர வருட யுகம் ஆகிய புத்தகங்களையும் பரலோகத்துக் குரியதும் பூமிக்குரியதுமான தேவனுடைய ராஜ்யம் என்ற சிறு புத்தகத்தையும் வாசிக்கவும்.

***

**சொல்லர்த்தத்தின்படி அல்லாமல், வெளிபுறத் தோற்றத் தின்படி அல்லாமல் - ஆழமான சிந்தனைக்கு !!!**

(உபாகமம் 6 : 6–9, 12)

**6) இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது. 7) நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசி, 8) அவைகளை உன் கையின்மேல் அடையாளமாகக் கட்டிக்கொள்வாயாக; அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் இருக்கக்கடவது. 9) அவைகளை உன் வீட்டு நிலைகளிலும், உன் வாசல்களிலும் எழுதுவாயாக.**

**12) நீ அடிமைப்பட்டிருந்த வீடாகிய எகிப்துதேசத்திலிருந்து உன்னைப் புறப்படப்பண்ணின கர்த்தரை மறவாதபடிக்கு எச்சரிக்கையாயிரு.**

ஆவிக்குரிய இஸ்ரவேலருக்கு – Pas. Russell Comments-யை பார்க்கவும்.

Visit us at : **www.biblestandardindia.com**

*For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact :*

**Bro. V. Vincent Jeyakumar**

**Laymen's Home Missionary Movement**

32-D, Dr.Solomon Compound, Near Railway Gate, Nazareth - 628 617
Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincent.v31@gmail.com
Cell : 98949 26629

FOR PRIVATE CIRCULATION ONLY